Saturday மெயில்
A Fascinating Weekly Bulletin
01 - 19
06-02-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

# 2010 நோபல் சமாதானப் பரிசு இன்ரர்நெற்றுக்கு கிடைக்குமா?

2010 நோபல் சமாதானப் பரிசுக்காக 'இன்ரர் நெற்' சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து வெளியாகும் மாதாந்தச் சஞ்சிகையான 'Wired' இன் இத்தாலியப் பதிப்பான 'Wired Italia' வே இன்ரர் நெற்றை சிபாரிசு செய்திருக்கிறது.

தொடர்பாடலின் ஊடாக பேச்சுவார்த்தை விவாதம் மற்றும் கருத்தொருமிப்பை மேம்படுத்தி வருகின்றமைக்காகவே இவ்வருடத்தைய நோபல் சமாதானப் பரிசு இன்ரர் நெற்றுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சஞ்சிகை கூறியிருக்கிறது.

தொழில்நுட்பம் எவ்வாறு கலாசாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகியவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய விபரங்களை வெளியிடுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு 'Wired' சஞ்சிகை பிரசுரமாகிறது. 1993 மார்ச்சில் இருந்து இது வெளிவந்துகொண்டிருக்கிறது.

இச் சஞ்சிகையுடன் சேர்ந்து இன்ரர் நெற்றைச் சிபாரிசு செய்திருப்பவர்களில் 2003 நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற ஈரானிய மனித உரிமைகள் ஆர்வலரும் வழக்கறிஞருமான ஷிரின் எபாடி, மார்பகப் புற்றுநோய்க்கான சிகிச்சைகளுக்குப் பெரும் பங்களிப்புகளைச் செய்தமைக்காக உலகில் பிரபல்யமான இத்தாலிய சத்திர சிகிச்சை நிபுணர் உம்பேர்ட்டோ வெரொனேசி ஆகியோரும் அடங்குவர்.

'சமாதானத்துக்காக இன்ரர் நெற்' (Internet for Peace) என்ற பிரசார இயக்கத்தை உலகம் பூராகவும் செய்வதற்கான நடவடிக்கைகளையும் Wired Italia ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பிரசாரம் எதிர்வரும் செப்டெம்பர் வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்ரர்நெற் வலையமைப்பைப் பயன்படுத்தி உலகில் அமைதியையும் சமாதானத்தையும் மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வதற்கு முயற்சித்த அனுபவங்கள் மற்றும் பல்வேறு அம்சங்களை முதன்மைப்படுத்தி இந்த பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

'இன்ரர்நெற்றை பிரமாண்டமான ஒரு சமூகமாக நாம் நோக்க வேண்டும். இச் சமூகத்திலே வேறுபட்ட மத நம்பிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் கொண்ட உலகம் பூராவுமுள்ள ஆண்களும் பெண்களும் ஒருவரை மற்றவர் புரிந்துகொண்டு தொடர்பாடலைச் செய்யக்கூடியதாக இருக்கிறது. இதன் மூலமாக சகல தடைகளையும் தகர்த்தெறிந்து கொண்டு அறிவைப்பகிர்ந்துகொள்ளக்கூடிய புதிய கலாசாரமொன்று உலகில் பரப்பப்படுகிறது. இந்தக் காரணத்துக்காக மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்பும் முதல்தரமான ஆயுதமாக இன்ரர் நெற்றை கருத முடியும். இந்த ஆயுதத்தை வெறுப்புணர்வையும் மோதலையும் நிர்மூலஞ் செய்து சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பரப்புவதற்கு எம்மால் பயன்படுத்த முடியும்' என்று Wired Italia வின் ஆசிரியர் றிக்கார்டோ லுனா தெரிவித்திருக்கிறார்.

உலகளாவிய ரீதியில் நம்பிக்கையுணர்வைத் தோற்றுவிக்கக்கூடிய ஆயுதமாக இன்ரர் நெற் எவ்வாறு உதவுகிறது என்பதற்கு ஈரானில் அண்மையில் நடைபெற்ற தேர்தலின் போதான சம்பவங்கள் புதியதொரு உதாரணமாகவே இன்ரர் நெற் இருந்தமையினாலேயே ஈரானிய தேர்தல் பற்றிய தகவல்களை உலகம் பூராவும் அறிவிக்கக்கூடியதாக இருந்தது. அல்லாவிட்டால் அத்தகவல்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் என்றும் ஆசிரியர் தெரிவித்திருக்கிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிகரிக்கும் விவாகரத்துகள்

கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. கல்யாணத்தைப் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார். திருமணத்தின் சிறப்பைச் சொல்ல இப்படி எத்தனையோ பழமொழிகள். இவையொன்றும் யோசித்து எழுதப்பட்டதல்ல. வாழ்ந்து காட்டியவர்களால் சொல்லப்பட்ட அனுபவம்.

கல்யாணம் என்பது சாதாரண விடயமா? வரன் தேடி அலைந்து திரிந்து இன்னாருக்கு இன்னார் என்று தீர்மானிக்கப்படுகிறது. பின்னர் பெண் வீடு பார்க்க ஒருநாள், மாப்பிள்ளை வீடுபார்க்க ஒருநாள், நிச்சயதார்த்தம், பொன்னுருக்கல், கல்யாணம், வரவேற்பு என எத்தனையோ நிகழ்ச்சிகள். காதல் கல்யாணத்திலும் இந்த அலைச்சலுக்கும் செலவுக்கும் குறைச்சலில்லை. இப்படி நீண்ட பின்னணியைக் கொண்ட கல்யாணம் சட்டென்று விவாகரத்து மூலம் முடிவுக்கு வருவதேன்?

விவாகரத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. 'முன்பெல்லாம் விவாகரத்துக் கோருபவர்களில் அதிகப்பேர் ஆண்களாக இருப்பார்கள். பொருளாதார ரீதியாக மற்றவர்களை நம்பியிருக்க வேண்டியிருப்பதால் பெண்கள் அப்போது விவாகரத்துக்கு ஒப்புக் கொள்வதில்லை. இப்போது நிலைமை மாறிவிட்டது. ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் அதிகம் சம்பளம் வாங்குபவர்களாகவும் இருக்கிறார்கள். பொருளாதாரச் சுதந்திரம் அவர்களைத் தைரியமாக முடிவெடுக்க வைக்கிறது' என்கின்றனர் ஆண் வழக்கறிஞர்கள்.

இதைச் சில பெண் வழக்கறிஞர்கள் மறுக்கிறார்கள். 'பெண்களுக்கு இப்போதுதான் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவுதான் தைரியமாக விவாகரத்துச் செய்ய முன்வருகின்றனர். இப்போதுதான் அவர்களுக்கு சட்டம் உரிய பாதுகாப்பைத் தரும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. அதன் விளைவுதான் மனைவியின் இரகசியத்தை நண்பர்களுடன் பங்கு போடத் துணியும் கணவன்மார் நீதிமன்றக் கூண்டில் ஏற்றப்படும் காட்சிகள்' என்கின்றனர் பெண் வழக்கறிஞர்கள்.




ஆனால், புள்ளிவிபரங்களைப் பார்த்தால் விவாகரத்துக் கோருபவர்களில் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் ஏறக்குறைய சரிசமமாகவே இருக்கின்றனர். ஆனால், பத்து ஆண்டுகளுக்கு முன்பு விவாகரத்துக் கோரியவர்களில் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்துள்ளது. ஆண், பெண் சமம் என்ற நியாயமான உணர்வு பல குடும்பங்களில் இல்லை. எத்தனை நாகரிகமாக மாறினாலும் ஆண், பெண் நட்பினை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இன்னும் பலருக்கு வரவில்லை.

நட்பாயிருக்கலாம், ஜோடி போட்டே நேரம் காலம் இல்லாமல் ஊர் சுற்றுவதும் ஊர்வலத்தில் சென்று வருவதும் எப்படி பிரண்ஸிப் என்று சொல்வது என்கிறார் பன்னாட்டு நிறுவனமொன்றில் மாதம் 5 இலக்க சம்பளம் வாங்கும் ஒருவர். இன்னொரு பன்னாட்டு நிறுவனத்தில் அதே 5 இலக்க சம்பளம் வாங்கும் அவரது மனைவி தொழில் ரீதியாகக் கூட வேலை செய்பவர்களுடன் சென்று வருவதையெல்லாம் சந்தேகப்பட்டால் எப்படி? ஆள் படித்தால் மட்டும் போதாது பக்குவமும் இருக்கணும் என்கிறார். இருவரும் காதல் திருமணம் செய்தவர்கள். விருப்ப விவாகரத்துக்காகக் காத்திருக்கும் இருவரும் அடுத்த திருமணத்திற்கு ஆள்பார்த்துவிட்டது கூடுதல் தகவல்.

முன்பெல்லாம் விவாகரத்து ஆனவர்கள் என்றால் கல்யாணம் செய்து கொள்ள மற்றவர்கள் தயங்குவார்கள். காலமெல்லாம் தனியாக வாழ வேண்டும். இப்போது அந்தப் பிரச்சினையில்லை. விவாகரத்துக் குறித்து எண்ணம் மாறியிருக்கிறது. அதனால் விவாகரத்துச் செய்யும் தயக்கமும் குறைந்திருக்கிறது. விவாகரத்து இன்னொரு காரணமாக இருப்பது தாம்பத்திய உறவு. இந்த விடயம் வெளியில் தெரிந்தால் அசிங்கம் என்பதால் சில சமயங்களில் இருதரப்பும் பேசி ஒன்றாகவே விருப்ப விவாகரத்துக்கு விண்ணப்பிக்கின்றனர். செக்ஸில் திருப்தியில்லை என்று பெண்கள் வழக்குத் தொடுப்பது முன்பு குறைவாக இருந்தது.

இப்போது இதேபோல் அதிகரித்துவரும் இன்னொரு விடயம் கள்ளக்காதல். கத்தி, கல்லைத் தூக்க விரும்பாதவர்கள் கௌரவமாக நீதிமன்றத்தை நாடுகின்றனர். செக்ஸ், கள்ளக்காதல் இரண்டு விடயத்தை நிரூபிப்பதில் சிக்கல் இருப்பதால் வேறு விடயத்தைக் காரணமாகக் கூறி விவாகரத்தைக் கோருகின்றனர். பெரும்பான்மையான விவாகரத்து வழக்குகளில் அதிகம் பாதிக்கப்படுவது அப்பாவிக் குழந்தைகள்தான். அப்பா ஒரு வாழ்க்கை, அம்மா ஒரு வாழ்க்கை என்று தேடிக்கொண்டு சென்றுவிட்டால் அம்மம்மா, தாத்தா என உறவினர்களின் வீடுகளில் அண்டி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். இல்லாவிட்டால் அம்மா, அப்பா என யாராவது ஒருவரிடமிருந்தாலும் இந்தப் பாதிப்புக் குறைவில்லை. இந்தப் பாதிப்பு அவர்கள் கல்யாணம் ஆகும்வரை தொடர்கிறது.

குழந்தைகளுக்காகப் பொறுத்துக் கொண்டு வாழ்பவர்கள் அதிகம். அதனை மற்றவர்களும் கவனத்தில் கொள்ளலாம். நாம் செய்யும் தவறுக்கு பிள்ளைகள் பலிகடாவாகக்கூடாது. அதற்காக என்ன செய்தாலும் பொறுத்துக்கொண்டு போக வேண்டுமென்ற அவசியமில்லை. பேசித் தீர்க்கலாம். பெற்றோரை அணுகலாம். தேவைப்பட்டால் நண்பர்களையும் அணுகலாம். எல்லாவற்றுக்கும் தீர்வுண்டு. அன்பிருந்தால் எல்லாவற்றையும் சரி செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் சொத்துகளை கவரும் தனியார் வங்கிகள்

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்திருப்பதையடுத்து நாட்டில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கூறும் அரசாங்கம் அவ் அபிவிருத்திப் பணிகளில் பெரும்பாலான பணிகளை தென்பகுதிகளிலேயே முடுக்கி விட்டிருக்கின்றது.

யாழ்.குடாநாட்டிலும் அசுரவேகத்தில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் அவை மக்களுக்கான நேரடி அபிவிருத்திப் பணிகள் என்றோ, மக்களை எளிதில் சென்றடையக்கூடிய அவர்களுக்கான உடனடி நிவாரணியாக அமையக்கூடிய அபிவிருத்திப் பணிகள் என்றோ கூறிவிட முடியாது.

தென்பகுதிகளிலிருந்து படையெடுக்கும் யாழ். குடாநாட்டு மக்கள் இது வரையில் பெயரையே அறிந்திராத வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் தனியார் கம்பனிகளும் கணப்பொழுதில் புதுப்புதுக் கட்டிடங்களை நிறுவி அதில் தமது பிராந்தியக் கிளைகளைத் திறந்து வருகின்றன.



இவை எல்லாம் குடாநாட்டு மக்கள் மீது கொண்ட அதீத அக்கறை காரணமாக அல்லது அவர்களது வாழ்வாதாரத்துக்கு அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என்னும் எண்ணத்துடன் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் என்று கூறிவிட முடியாது. மாறாக அவர்களிடம் எவ்வளவு சொத்துகள் இருக்கின்றன. அவர்கள் இதுவரையில் சேர்த்து வைத்திருக்கும் சொத்துகள் பணம் என்பவற்றை எவ்வளவுக்கு எவ்வளவு சுரண்டி எடுத்துக் கொண்டு சென்று தென்பகுதி அபிவிருத்திக்குப் பங்களிக்கலாம், என்று சிந்தித்துச் செயற்படும் ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின் மக்களுக்குச் சேவை செய்யவென நிறுவப்பட்ட இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்ற அரச வங்கிகள் நிறுவப்பட்டு 40-50 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவற்றின் பரிமாண வளர்ச்சிப் போக்கு ஆமைவேகத்தில் மிகவும் மந்தகதியில் இருந்து வரும் அதேநேரம், அதற்கு எத்தனை ஆண்டுகள் பிந்தியதாக ஆரம்பிக்கப்பட்ட பல தனியார் வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் அசுர வேகத்தில் வளர்ந்து நாடு முழுவதும் பல கிளைகளையும் கொண்டிருக்கின்றன.

இது தனிப்பட்ட அபிவிருத்தியில் காணப்படும் அதீத முன்னேற்றம் என்று வர்ணிக்கப்பட்டாலும் மக்கள் அபிவிருத்தியில் அவை காட்டும் ஆர்வம், முழுமையான பங்களிப்பு என்ன? மக்களிடம் இருந்து பெறப்படும் பணம் அவர்கள் அபிவிருத்திக்கே முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா? என்பதில் சந்தேகங்களே இருக்கச் செய்கின்றன.

யாழ்.குடாநாட்டிலும் அண்மைய நாட்களில் நகரப் பகுதியில் புதிதாகக் கிளைகளைத் திறந்திருக்கும் பல தனியார் வங்கிகள், எடுத்த எடுப்பிலேயே அங்கிருக்கும் சிறு சிறு நகரங்களிலும் தமது கிளைகளை மேலும் விஸ்தரித்து மக்களுக்குச் சேவை வழங்கி வருகின்றன.

இவ் வங்கிகள் மூலம் வசூலிக்கப்படும் அல்லது திரட்டப்படும் பணம் சொத்துகள் என்பன இங்கேயே முதலீடு செய்யப்பட்டு குடாநாட்டு மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு அவர்களின் அபிவிருத்திப் பாதையில் ஒரு மாற்றங்காண்பதற்கு உதவுமா? என்றொரு கேள்வி எழுப்பப்படுமாக இருந்தால் அதில் சந்தேகமே. மாறாக அவை தென்பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் முதலீடு செய்யப்பட்டு அதீத இலாபம் ஈட்டும் நடவடிக்கைகளாக அமைந்திருக்கும்.

இவை தவிர்க்கப்பட வேண்டிய செயற்பாடுகளாகும். மக்கள் தமது மனங்களில் இடம்பிடித்த சில வங்கிகளைத் தவிர வேறு வங்கிகளில் தமது பணத்தை வைப்பிலிடவோ முதலீடு செய்யவோ விரும்புவதில்லையாயினும் சில சமயங்களில் அதிக வட்டி கொடுக்கும் வங்கிகளில் நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிடுகின்றனர். இவற்றில் சில வங்கிகள் நிதி நிறுவனங்கள் காலப் போக்கில் தமது செயற்பாடுகளை சுருக்கிக் கொண்டும் முற்றாகச் செயலிழந்தும் போகின்ற நிலையில் மக்களின் வைப்புக்களும் சொத்துகளும் கேள்விக்குறியாகவே அமைந்துவிடுகின்றன என்கின்ற பயம் ஒரு புறமிருந்தாலும் வந்தாரை வரவேற்கும் ஈகை, இரக்கம், வீரம், விருந்தோம்பல் போன்ற பண்பாட்டுக் குணங் கொண்ட குடாநாட்டு மக்கள் அவர்களை வரவேற்று தமது பணங்கள், சொத்துகளை வைப்பிலிடுகின்றனர்.

இப் பணமும் சொத்துகளும் வேறெங்கும் எடுத்துச் செல்லப்படாது வாழ்க்கை வட்டம் போன்று சுழற்சி முறையில் குடாநாட்டு அபிவிருத்திக்கோஅன்றி அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் பரந்து வாழும் வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளுக்கே முழுமையாகப் பயன்படுத்தப்படுமாயின் வைப்பிலிடுவோரின் எதிர்பார்ப்பும் நிறைவு பெறும். வங்கிகளின் வளமான எதிர்காலமும் சிறப்படையும்.

செ.சக்திதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதலாகி கசிந்துருகும் செல்போன் காதலர்கள்

இன்றைய இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையின் எல்லை எதுவென்று தெரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.பல்வேறு வசதி வாய்ப்புகளும் பெருகிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இவர்களுக்கு கட்டுப்பாடு போட்டு வளர்ப்பதிலும் பெற்றோர் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீட்டிலிருந்து காலை புறப்படுகின்ற பிள்ளைகள் சிலர் மாலை வேளையே வீடுவந்து சேர்கின்றனர்.இதற்கிடையில் செய்கின்ற திருகுதாளங்களைப் பெற்றோர்கள் அறிய வாய்ப்பில்லை.கடந்த காலங்களில் வாழ்ந்த எமது இளைஞர்கள் அனுபவித்திருக்காத பல 'சலுகைகளை' இன்று யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற இளைஞர்கள் அனுபவிக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமான தொழில்நுட்ப சாதனமாகக் கையடக்கத் தொலைபேசி விளங்குகின்றது.

எதை,எங்கு,எப்படிப் பாவிப்பதென்ற நிலையிலிருந்து விலகிய செயற்பாடாகவே குடாநாட்டு இளைஞர்களின் கையடக்கத் தொலைபேசிப் பாவனை அமைந்திருக்கின்றது.அடையாள அட்டையை மறந்தாலும் எனது கையடக்கத் தொலைபேசியைப் பொக்கற்றில் வைப்பதற்கு நான் மறந்ததில்லை என்று கூறுகின்றார் இங்குள்ள ஒரு இளைஞன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டில் அடையாள அட்டைக்கிருந்த அதி முக்கியத்துவம் என்பது யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.இந்த இடத்திலிருந்துகொண்டு ஒரு இளைஞன் இவ்வாறு கூறுவதென்பது கையடக்கத் தொலைபேசியின் அதி உச்சப் பாவனையையே எடுத்துக் காட்டுகின்றது.

வீட்டின் கஷ்ட நிலை மற்றும் குடும்பப் பொறுப்பு போன்றன தொடர்பாக உய்த்துணர முடியாத இளைஞர்,யுவதிகள் பலர் கையடக்கத்தொலைபேசிக் கலாசாரத்தால் சீரழிந்து போவதைக் குடாநாட்டில் அவதானிக்க முடிகின்றது. ஏதேச்சையாகக் கையில் கிடைக்கின்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துகின்ற இளைஞர்கள் அந்த இலக்கத்திற்குரியவர் பெண்ணாக இருந்தால் அதுவும் தங்கள் வயதையொத்த பெண்ணாக இருந்தால் அந்த இலக்கத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு உரையாடுகின்றனர். இந்த உரையாடல் நட்பாக மாறுகின்ற நிலையில் இருவரும் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கின்றனர்.

ஒருவரையொருவர் அடையாளம் காண்பதிலும் சில நடைமுறைகள் பேணப்படுகின்றன.நான் இந்த நிறத்தில் ஆடையணிந்து வருவேன் என்று இவர் கூற, மறு முனையில் 'அவவும்' நான் இந்த நிற உடையணிந்து வருவேன் என்று கூறி அடையாளம் கண்டுகொள்கின்றனர்.நட்பு தொடர்கிறது.

சில வாரம் சென்ற பின்னர் காதலாகிக் கசிந்துருகி மாதமொன்று சென்றவுடன் மறைவிடத்தில் சந்தித்து 'அலுவல்கள் முடிந்தவுடன்' பெண்ணின் வயிற்றில் குழந்தை வளரும். அடுத்த சில வாரங்களில் 'அவ' அழைப்பை எடுப்பா.தொடர்ச்சியாக டயல் பண்ணுவா. ஆனால், வருகின்ற பதில் என்ன தெரியுமா? 'இந்த இலக்கம் பாவனையில் இல்லை' என்பதுதான்.

ஒருசில வாரங்கள் பழகிய நிலையில் உருப்படியாக எந்தத் தகவல்களையும் அறியாமல் தங்களை இழக்கின்ற பெண்களின் எதிர் காலக் கனவுகளும் கற்பனைகளும் உடைந்து போகின்றன. சமுகத்தில் அவப்பெயருடன் வாழ்வா? சாவா? என்ற நிலை ஏற்படுகின்றது.

பெண்கள் மட்டும்தான் இவ்வாறு ஏமாறுகிறார்களாவென்றால் நிச்சயமாக இல்லை. ஆண்களும் பல பெண்களால் ஏமாற்றப்படுகிறார்கள்.'றீலோட்' வகையிலும் நேரடியாகவும் ஆண்களிடமிருந்து பெண்கள் பெருந்தொகைப் பணத்தைக் கறக்கிறார்கள்.இவ்வாறு மாட்டுப்படுகின்ற ஆண்களை 'சொப்பிங்' என்று அழைத்துச் செல்கின்ற பெண்கள் அவர்களின் பணத்தில் விதம் விதமான ஆடைகள் உட்பட பொருட்களைக் கொள்வனவு செய்வதாகவும் கூறப்படுகின்றது.பாவம் பின்னர் அவர்கள் 'கழற்றி' விடப்படுகின்றார்கள்.

மேலே கூறப்பட்டதைப் போல குடும்பப் பொறுப்பற்ற இளைஞர்கள் மட்டும்தான் (இளைஞர்கள் என்பது பொதுப்பால் ஆணையும் பெண்ணையும் குறிக்கும்) இவ்வாறு பாதிக்கப்படுகின்றார்களென்பதல்ல.திருமணமாகி குழந்தைகளுடன் இருக்கின்றவர்கள் கூட இவ்வாறான தவறான தொலைபேசி அழைப்புகளுக்குள் சிக்குகின்றனர்.இதனால், இவர்களின் குடும்பங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏறபட்டு பிரிவினைகள் விவாகரத்துகள் ஏற்படுகின்றன.ஏற்பட்டிருக்கின்றன.

குடாநாட்டில் மிகக்குறைந்த விலையில் பதிவு செய்யப்படாமல் 'சிம்' அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளமையே இவ்வாறான நிலைமைகளுக்குக் காரணமென்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயல்பாகவே தோன்றுகின்ற 'காதல்' என்ற உணர்வே இவ்வாறான 'கழுத்தறுப்புகளுக்கு' காரணமாக அமைகின்றது.



காதல் கட்டாயமானதுதான். சிரிப்பு இதயத்தின் இசை என்றும் சிந்தனை சக்தியின் பிறப்பிடம் என்றும் கூறப்படுவதைப் போல அன்பின் வெளிப்பாடு தான் காதல். இவ் உலக இயக்கத்திற்கான அனைத்துச் செயற்பாடுகளும் ஒருவித காதலின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன.

ஆனால்,கட்டாயமானதாயிருக்கின்ற அந்தக் காதலின் கவனயீனம் ஏற்பட்டால் அழிவே எஞ்சக்கூடும்.நெருப்பு வீட்டுக்குள் இருந்தால் ஆக்கத்தையும் வீட்டுக்கு மேலே இருந்தால் அழிவையும் ஏற்படுத்தும்.அதே போலத்தான் காதலும்.இளைஞர்கள் தொடக்கம் திருமணமானவர்கள் வரை அனைவரும் இந்த விடயத்தில் மிகவும் தெளிவுடன் செயற்படாவிட்டால் அவர்களின் எதிர்காலம் இருளாக மாறுவதற்கு அவர்களே காரணமாக அமைந்துவிடுவார்கள்.ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வருடங்களில் 2 இலட்சம் இந்திய விவசாயிகள் தற்கொலை



வங்கிகளில் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாமல் இந்தியாவில் 2008 ஆம் ஆண்டு மாத்திரம் 16,196 விவசாயிகள் தற்கொலை செய்தார்கள். விவசாயக் கடன் தொல்லையால் விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை 1997 ஆம் ஆண்டில் இருந்தே தீவிரமடைந்தது. 2008 ஆம் ஆண்டு விவசாயத் தற்கொலைகளுடன் சேர்த்து கடந்த 13 வருடங்களில் மொத்தமாக 199,132 விவசாயிகள் தற்கொலை செய்திருப்பதாக அந்த நாட்டின் தேசிய குற்றவியல் பதிவுப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட நெருக்கடிகள் தொடர்பாக ஆராய்ந்துவரும் ஊடகவியலாளர்களும் சிவில் சமூக அமைப்புகளின் முக்கியஸ்தர்களும் விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் தற்கொலை செய்யும் மாநிலங்களை 'தற்கொலை வலயம்' (Suicide Belt) என்று அழைக்கிறார்கள். இந்த வயலம் அருகருகாக அமைந்திருக்கும் 5 மாநிலங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம், சதிஷ்கார் ஆகியவையே அந்த மாநிலங்களாகும்.

2008 விவசாயிகள் தற்கொலைகளைப் பொறுத்தவரை இந்த ஐந்து மாநிலங்களிலும் 10,797 பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள். அகில இந்திய விவசாயிகள் தற்கொலையில் அது 66.6 சதவீதமாக அமைந்திருக்கிறது. 2007 ஆம் ஆண்டில் இந்த வீதம் 66.2 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிராவே இந்தியாவில் கூடுதல் எண்ணிக்கையான விவசாயிகள் தற்கொலை செய்த மாநிலமாக விளங்குகிறது. 3802 விவசாயிகள் அங்கு தற்கொலை செய்திருக்கிறார்கள்.

ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் தற்கொலை செய்திருக்கும் விவசாயிகளின் கூட்டு எண்ணிக்கை மகாராஷ்டிராவை விடவும் 40 அதிகமானதாகும். 2008 ஆம் ஆண்டின் அகில இந்தியத் தொகை 16,196 ஆக இருக்கிறது. 2007 ஆம் ஆண்டின் தொகையைவிடவும் இது 436 குறைவானதாகும்.

விவசாயிகள் தற்கொலைகளைப் பொறுத்தவரை பரந்தளவில் நோக்குகையில் கடந்த தசாப்தத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கவில்லை என்று இந்தியாவின் முன்னணி ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான 'த இந்து'வில் கிராமப்புற மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து எழுதும் சிரேஷ்ட பத்திரிகையாளரான பி.சாயிநாத் கூறுகிறார்.

2003 ஆம் ஆண்டில் இருந்து விவசாயிகள் தற்கொலை தேசிய சராசரி ஏறத்தாழ 30 நிமிடத்துக்கு ஒன்றாக இருந்து வந்திருக்கிறது என்று அவர் கணிப்பிட்டிருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட 5 மாநிலங்களிலும் ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரசேதம் மற்றும் சதிஷ்கார் ஆகிய மாநிலங்களிலேயே கூடுதல் எண்ணிக்கையான விவசாயிகள் தற்கொலைகள் பதிவாகியிருக்கின்றன. இந்த மூன்று மாநிலங்களிலும் 2007 ஐ விட 2008 இல் தற்கொலைகள் அதிகரிப்பு 604 ஆக இருக்கின்ற அதேவேளை, மகாராஷ்டிராவில் இந்த அதிகரிப்பு 436 ஆகவும் கர்நாடகத்தில் 398 ஆகவும் இருக்கிறது.

ஆனால் வேறு சில மாநிலங்களில் விவசாயிகள் தற்கொலைகளில் வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக கேரளத்தில் 412 விவசாயிகளும் மேற்கு வங்காளத்தில் 243 விவசாயிகளும் தற்கொலை செய்திருக்கிறார்கள். 2008 விவசாயிகள் தற்கொலைகளைப் பொறுத்தவரை விவசாயிகள் தற்கொலை வலயத்தில் வரும் 5 மாநிலங்களும் அகில இந்திய எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்காக அமைகின்றன.

1997 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 12 வருடங்களாக தேசிய குற்றவியல் பதிவுப் பணியகம் விவசாயிகள் தற்கொலைகள் எண்ணிக்கையை இந்தியாவின் சகல மாநிலங்களிலும் பதிவு செய்து வருகிறது.

1997 தொடக்கம் 2002 வரையான முதல் 6 வருடங்களில் தற்கொலை வலயத்தில் உள்ள ஐந்து மாநிலங்களிலும் 55,769 விவசாயிகள் தற்கொலை செய்தனர். 2003 தொடக்கம் 2008 வரையான அடுத்த 6 வருடங்களில் இத்தொகை 67,054 ஆகும். வருடமொன்றுக்கு சராசரி அதிகரிப்பு சுமார் 1900 ஆகக் காணப்பட்டது.

மகாராஷ்டிராவில் 1997 ஆம் ஆண்டிலிருந்து 41,404 விவசாயிகள் தற்கொலை செய்ததாக பதிவாகியிருக்கிறது. விவசாயிகள் தற்கொலைகளைப் பதிவு செய்வதை மகாராஷ்டிரா 1995 ஆம் ஆண்டே ஆரம்பித்தது. அந்த ஆண்டு அங்கு 44,468 விவசாயிகள் தற்கொ[ லை] செய்திருக்கிறார்கள். வேறு எந்த மாநி[லமு]ம் இது விடயத்தில் மகாராஷ்டிராவு[க்]குக் கிட்ட வரவில்லை.

1997-2002 காலகட்டத்தில் மகாரா[ஷ்]டிராவில் தினமும் சராசரியாக 8 விவசாயிகள் தற்கொலை செய்தனர். இத்தொகை 2003-2008 காலகட்டத்தில் ஆக அதிகரித்தது.

சென்னை அபிவிருத்தி ஆய்வுகளுக்கான நிலையத்தில் பணியாற்றும் பொருளியல் நிபுணரான பேராசிரியர் கே.நாகராஜ் தேசிய குற்றவியல் பதி[வுப்] பணியகத்தின் மேற்படி புள்ளிவிபரங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்;

விவசாயிகள் தற்கொலை வலயத்[தில்] தற்கொலைகளில் வீழ்ச்சியைக் காண[மு]டியவில்லை. ஆனால் மாநிலங்களை தனித்தனியாக நோக்கினால் விவசா[யி]கள் தற்கொலைகளின் எண்ணிக்கை கடந்த 12 வருடங்களிலும் வேறுபா[டு]களைக் காணக்கூடியதாக இருக்கிறது. 70 ஆயிரம் கோடி ரூபா விவசாயிக் கடன் இரத்துச் செய்யப்பட்ட 2008 [ஆம்] ஆண்டில் நிலைவரம் இதுவென்றால் வரட்சி நிலவிய வருடமாக இருந்த 20[09] இல் இடம்பெற்றிருக்கக்கூடிய விவசாயிகள் தற்கொலைகள் பற்றிய விபரங்கள் கிடைக்கப்பெறும் போது பெரும் அதிர்ச்சியடைய வேண்டியிருக்கும். [...] இந்தியாவில் விவசாயிகளினால் எதிர்நோக்கப்படும் இடர்பாடுகளின் பாரதூரத் தன்மையை உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு தேசிய மொழி இல்லை




இந்தியாவுக்கு தேசிய மொழியொன்று இருக்கிறதா? இல்லையென்று மேற்கு இந்திய மாநிலமான குஜராத்தின் மேல் நீதிமன்றம் கூறியிருக்கிறது.

இந்தியை ஒரு தேசிய மொழியாக பெரும்பான்மையான மக்கள் ஏற்றிருக்கிறார்கள். பலர் இந்தி பேசுவதுடன் தேவநாகிரி எழுத்து வடிவத்தையே எழுதுகிறார்கள். ஆனால், இந்தி உத்தியோகபூர்வமாக இந்தியாவின் தேசிய மொழியல்ல என்றும் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

பாவனைப் பொருட்கள் சுற்றப்பட்டிருக்கும் பொதிகளில் அந்தப் பொருட்கள் பற்றிய விபரங்கள் இந்தி மொழியில் இடம்பெறவேண்டுமென்று உத்தரவிடுமாறு தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணையொன்றின் இறுதியில் வழங்கிய தீர்ப்பிலேயே குஜராத் பிரதம நீதியரசர் எஸ்.ஜே.முக்கோபாத்யா மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். இந்தியில் பொருட்கள் பற்றிய விபரங்கள் பொதியில் பொறிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுவதற்கு அவர் மறுத்துவிட்டார்.

உற்பத்தியாளர்கள் பொதிக்குள் இருக்கக் கூடிய பொருட்களின் கூறுகள் தயாரிக்கப்பட்ட திகதி, காலாவதித் திகதி மற்றும் விலை போன்ற விபரங்களை இந்தியில் பொறிப்பதைக் கட்டாயமாக்குமாறு மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கத்துக்கும் உத்தரவிடக் கோரி குஜராத் மேல் நீதிமன்றத்தில் பொதுநலன் சார்ந்த வழக்கொன்றை சுரேவ்ஷ கச்சாடியா என்பவர் தாக்கல் செய்திருந்தார்.

தாங்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள், உட்கொள்ளுகின்ற உணவு வகைகள் எத்தகையவை என்பதைப் பற்றிய விபரங்களை சகல மக்களும் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே தனது மனுவுக்கு அடிப்படையாக மனுதாரர் முன்வைத்த வாதமாகும்.

இந்தி தேசிய மொழியாக இருப்பதனாலும் நாட்டில் வாழ்கின்ற பெரும் எண்ணிக்கையான மக்களினால் விளங்கிக் கொள்ளக்கூடிய மொழியாக இருப்பதனாலும் பொருட்கள் பற்றிய விபரங்கள் பொதிகளில் இந்தி மொழியில் அச்சிடப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இந்திய அரசிலமைப்பு உருவாக்கப்படுவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிருணய சபையில் இடம்பெற்ற வாதங்களையும் முன்வைக்கப்பட்ட கருத்துகளையும் தனது வாதத்துக்கு ஆதாரமாக மனுதாரரின் வழக்கறிஞர் முன்வைத்தார்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பொருட்கள் தர நிர்ணய சட்டவிதிகளை மேற்கோள்காட்டி பொதிகளில் பொருட்கள் பற்றிய விபரங்கள் ஆங்கிலத்தில் அல்லது தேவநாகிரி எழுத்து வடிவிலான இந்தியில் பொறிக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்.

இந்தி இந்தியாவின் தேசிய மொழியென்றும் அதனால் அது உத்தியோகபூர்வ மொழியென்று அறிவுறுத்தல் ஏதாவது இருக்கிறதா என்று விசாரணையின் போது நீதிபதிகள் வினவினர். இது தொடர்பில் அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டிருக்கக் கூடிய எந்தவொரு அறிவுறுத்தலையும் வழக்கில் சமர்ப்பிக்க முடியவில்லை. இந்திக்கு உத்தியோகபூர்வ [அரச கரும மொழி] அந்தஸ்தை அரசியலமைப்பு வழங்கியிருக்கின்றதே தவிர தேசிய மொழியாக இந்தி அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை என்பதே அதற்குக் காரணமாகும்.

பொதிகளில் பொருட்கள் பற்றிய விபரங்கள் தேவநாகிரி எழுத்து வடிவிலான இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் பொறிக்கப்பட வேண்டுமென்று உற்பத்தியாளர்களுக்கான சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்தது. அத்துடன் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதென்பது உற்பத்தியாளருக்குரிய தற்துணிவு உரிமையாகும். எனவே, பொருட்கள் பற்றிய விபரங்கள் இந்தியில் பொறிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கங்களுக்கோ அல்லது உற்பத்தியாளர்களுக்கோ உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## மகிழ்ச்சியான ஒருமணி நேரம்



ஒரு தம்பதியரின் திருமண வாழ்வின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களின் போது மனைவி கணவரிடம் கேட்டாள் 'உங்களை எனக்கு திருமணம் பேசியபோது நான் ஒரு மணித்தியாலமாக எதுவுமே பேச முடியாமல் போய் விட்டது. அந்தளவுக்கு மனதில் புழகாங்கிதமடைந்தேன் உங்களுக்கு நினைவிருக்கிறதா' என்று .

'ஆமாம் அந்த ஒரு மணித்தியாலம்தான் எனது வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான நேரமா இருந்தது' என்று பதிலளித்தார் கணவர்.

## உங்கள் மனைவி எப்படி இருப்பாள்?



இரு ஆண்கள் சூப்பர் மார்க்கெட் ஒன்றில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பொருட்களை ஏற்றி உருட்டிக் கொண்டுவந்த தள்ளுவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதிவிட்டன.

'மன்னிக்கவும், எனது மனைவியை இந்தக் கட்டிடத்திற்குள் தேடிக்கொண்டிருக்கிறேன். அதனால் உங்கள் வண்டியைக் கவனிக்கவில்லை' என்று ஒருவர் சொன்னார்.

'பாருங்கள் என்ன தருணப் பொருத்தம் என்று, நானும் எனது மனைவியைத் தான் இதற்குள் தேடிக்கொண்டிருக்கிறேன்' என்று மற்றவர் சொன்னார்.

'உங்களுக்கு எனது உதவி தேவையா? உங்கள் மனைவி எப்படி இருப்பாள்' முன்னையவர் கேட்டார்.

'அவள் உயரமாக, சடை முடியுடன் மிகவும் அழகாக சிவப்பாக இருப்பாள்' என்று பதில் வந்தது.

'உங்கள் மனைவி எப்படி இருப்பாள்' என்று மற்றவர் கேட்டார்.

'பிரச்சினையொன்றுமில்லை நாமிருவரும் உங்கள் மனைவியையே முதலில் தேடுவோம்' என்று வந்தது பதில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு மருந்து பயன் தருமா?

சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பின் International organization for migration (Iom) கூற்றுப்படி தடுப்பு மருந்து ஏற்றல் திட்டமானது மிகவும் பயனளிக்கக்கூடியதும் மிகவும் நன்மைபயக்கின்ற ஒரு நிகழ்ச்சித் திட்டமென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொதுச் சுகாதார துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியதிட்டமுமாகும்.


தடுப்பு மருந்துகள் நோயை ஏற்படுத்துகின்ற நோய்க்காரணிகளிலிருந்து தருவிக்கப்பட்ட புரதம் அல்லது சிக்கலான காபோவைதரேற்றுக்களைக் கொண்டுள்ளது. தடுப்பு மருந்து ஏற்றலின் பிரதான நோக்கம் எமது நிர்ப்பீடனத் தொகுதியைத் தூண்டுவதன் மூலம் நோய்களுக்கெதிரான பிறபொருள் எதிரிகளை உடலில் உருவாக்குவதாகும். மேலும் நீர்ப்பீடன சக்தியானது ஞாபகக்கலங்களை (memory cells) தூண்டுவதன் மூலம் பின்னைய காலங்களில் குறிப்பிட்ட நோய்த் தொற்றுக்குள்ளாகும் போது அந் நோயிலிருந்து பாதுகாப்பைக் கொடுக்கின்றது இதன் மூலம் இறப்பு மற்றும் பலவிதமான சிக்கல்களைக் குறைக்கின்றது.

மேலும் ஒவ்வொருவரும் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் போது மறை முகமாக சமுதாயத்திலும் நிர்ப்பீடனத்தன்மை உருவாக்கப்படுகின்றது இதன் மூலம் குறிப்பிட்ட சமுதாயத்தில் பாரிய நோய்த் தொற்று ஏற்படாமல் தவிர்க்கப்படுகின்றது. சிலநோய்களை உருவாக்கும் வைரசுக்கள் பக்றீரியாக்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் மனிதனில் மட்டுமே வாழுகின்றன இயற்கையில் வேறு விலங்குகளில் காணப்படாத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நோய்க்கெதிராக தடுப்பு மருந்தேற்றல் மூலம் அந்நோயை உலகத்திலிருந்தே முற்றாக அகற்றிவிடலாம் (Eradication).

பொது சுகாதாரத்துறையில் ஒரு புரட்சி சேர் எட்வேட்ஜென்னரின் தடுப்பு மருந்துக்கண்டுபிடிப்புடன் உருவானது Sir Edwad Jenner சில பால்கறக்கும் மாதுக்கள் cow pox நோயை பெற்றுக் கொண்ட போது இவர்களில் உயிர்கொல்லும் நோயானது Small pox [சின்னம்மை] நோய் உருவாகவில்லை என்பதை அவதானித்தார். எனவே அவர் cow pox நோய்க் கிருமியை சிலபேரில் செலுத்திர் ஆராய்ச்சி செய்த போது அவர்களில் சின்னம்மை (Smallpox) நோய் உருவாகவில்லை என்பதைக் கண்டுபிடித்தார். இந்த அரிய கண்டுபிடிப்பு சின்னம்மை நோயின் தாக்கத்தை பெரும்மளவில் குறைத்தது. 1950 இல் 30 மில்லியன் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டபோதும் 1967 இல் 10-15 மில்லியன்களாக அது குறைவடைந்தது. இதற்கு அத்தடுப்பு மருந்தின் பாவனையே காரணமாகும்.

இதன் பின்பு உலக சுகாதார நிறுவனத்தால் இந்நோயினை உலகில் இருந்து அகற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. குட்ச்ரூருணீணிது நோயை உலகிலிருந்து அகற்றுவது சாத்தியமாயிற்று ஏனெனில் Smallpox வைரசானது மனிதனிலிருந்து மட்டுமே மனிதனுக்கு கடத்தப்பட்டது. இயற்கையாக வேறெந்த விலங்குகளிலும் இவ்வைரஸ் நிலைத்திருக்காது. அலி மாலின் (Ali maolin) என்னும் சோமாலிய நாட்டவரே கடைசியாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர். 1978 ஆம் ஆண்டு இந்நோயானது உலகிலிருந்து அகற்றப்பட்டதாக சான்றுபடுத்தப்பட்டது. தடுப்பு மருந்தேற்றல் மூலம் அகற்றப்பட்ட முதலாவது தொற்றுநோயாக Smallpox நோய் சரித்திரத்தில் இடம்பெற்றது.

இந்த வெற்றிகரமான செய்தியின் பின் பல தொற்றுநோய்களுக்கு எதிராகத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு பல



தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. பல நோய்கள் தற்போது அரிதாகவே நம்மால் அவதானிக்கப்படுகின்றன. தற்காலத்தில் மிக அரிதாகவேயுள்ள நோய்களுக்கெதிராக தடுப்பு மருந்துகள் ஏற்றப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் தடுப்பு மருந்துகளுடன் தொடர்புடைய வேறு பிரச்சினைகள் பெரிதாக்கப்பட்டு தடுப்பு மருந்துகளை ஏற்றுக்கொள்ளும் நிலையை மக்களிடையே குறைக்கின்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. உதாரணமாக தடுப்பு மருந்துகளால் (Vaccines) ஏற்படும் பக்கவிளைவுகள் (Side effects) தடுப்பு மருந்தேற்றும் போது ஏற்படும் தொற்றுக்கள், தடுப்பு மருந்துகளைப் பாதுகாக்கப் பயன்படும் இரசாயனப் பொருட்களுக்கான ஒவ்வாமை போன்றவை பற்றிய தகவல்களை முன்னிறுத்தி தடுப்பு மருந்தேற்றும் திட்டத்திற்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில் பல சமயக் கொள்கைகள், தத்துவக் கொள்கைகள், மூட நம்பிக்கைக் கருத்துகள் இதற்கு பக்கபலமாக இருக்கின்றன. பலர் ஒரு படிமேலே சென்று இயற்கைக்கெதிரான செயல்களை பல அரசாங்கங்கள் செய்கின்றன எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். அதிர்ஷ்டவசமாக இவ்வகைக் குரியவர்களின் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் மிகக்குறைவாகும். இக்குழுவின் சில பேர் தடுப்பு மருந்தேற்றலை எதிர்ப்பதற்குப் பதிலாக உரிய விளக்கங்கள் மேலும் கொடுக்கப்படவேண்டுமெனவும் அரசாங்கங்கள் கூடிய பொறுப்புடன் நடக்க வேண்டுமெனவும் கேட்கின்றனர்.

உலகளாவிய வெற்றிகரமான தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் சரித்திரத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு மருத்துவத்துறையினர் கடுமையாக உழைக்கவேண்டிய நிலையில் தற்போது உள்ளனர். தடுப்பு மருந்தேற்றல் திட்டத்திற்கெதிரான கருத்துகள் ஆதாரமற்றவை என்பதை எடுத்துக்காட்டவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இதற்கு ஊடகத்துறையின் பங்களிப்பு மிகமிக முக்கியம். ஊடகத்துறையினரால் அரிதாக ஏற்படும் பக்கவிளைவுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் தடுப்பு மருந்தேற்றலின் வெற்றிச் செய்திகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எதிர்மறையான செய்திகள் பொதுமக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்துவதுடன் மருத்துவத்துறையினரையும் இக்கட்டான நிலைக்கு இட்டுச் செல்லுகின்றன.

மேலும் விலங்கு ஆர்வலர்களால் அதிகளவு முக்கியத்துவம் விலங்களின் உரிமைகளுக்குக் கொடுக்கப்படுவதால் தடுப்பு மருந்துகளின் ஆராய்ச்சியில் விலங்குகளின் பாவனையைக் குறைக்கின்றன. உதாரணமாக சின்னமுத்து வைரஸ், கோழிக்குஞ்சு முளையத்தில் பாய்ச்சப்பட்டும், போலியோ குரங்குகளின் சிறுநீரகத்திலும் rubella vaccine [ஜேர்மன் சின்னமுத்து] கருச்சிதைவுக் குள்ளாகும் சிசுக்களிலிருந்தும் பெறப்படுகின்றன.

எந்தவொரு தடுப்பு மருந்தும் 100% வெற்றியளிப்பதில்லை. மேலும் மிகஅரிதாக Vavccine [தடுப்பு மருந்து] தரத்தில் குறைபாடுகள், அனுமதிக்கும் முறையில் ஏற்படும் பிழைகள் (Programme errors) மற்றும் ஆளுக்கு ஆள் வேறுபடும் ஒவ்வா நிலைமை என்பவற்றால் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. மேலும் தடுப்பு மருந்துகளின் தரம் குறையாமல் பாவிக்கப்படும் அலுமினியம் போமல் டிகைட் இரசம் போன்ற பதார்த்தங்களாலும் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. தொற்றுநோய் தடுப்பேற்றல் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் இப்பக்கவிளைவுகளைக் குறைக்க முடியும்.

**டாக்டர்**
**ந.ராஜேஷ் கண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்லாமே பணத்துக்குத் தாண்டா...

உலகின் தலைசிறந்த கோல்ஃப் விளையாட்டு வீரர் ரைகர்வூட்ஸ் பல பெண்களுடன் கள்ளக்காதல் தொடர்பு வைத்திருந்த விவகாரம் அம்பலமானதையடுத்து பெரும் அபகீர்த்திக்குள்ளாகியிருந்தார் அல்லவா?

சுவீடனைச் சேர்ந்த முன்னாள் மொடல் அழகியான அவரது மனைவி எலின் நொர்டெகிரென் விவாகரத்துச் செய்ய உத்தேசிப்பதாகவும் பேசப்பட்டது. ஆனால், ரைகர்வூட்ஸை விட்டு தற்போதைக்கு பிரியாமல் இருப்பதற்கு மனைவி திட்டமிடுவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. உலகிலேயே மிகவும் பணக்கார விளையாட்டு வீரராகவிளங்கும் ரைகர்வூட்ஸின் சொத்துக்களில் அரைவாசியைப் பெறுவதற்காகவே இந்த மனமாற்றம் என்று கூறப்படுகிறது.

2004 ஆம் ஆண்டில் ரைகர்வூட்ஸைத் திருமணம் செய்த எலினுக்கு 2 குழந்தைகள் இருக்கிறார்கள். ரைகர்வூட்ஸின் 50 கோடி பவுண்கள் பெறுமதியான சொத்துகளில் 25 கோடி பவுண் சொத்துக்களைப் பெற வேண்டுமானால் அவருடன் 10 வருடங்கள் வாழ்ந்திருக்க வேண்டும். அதனால் விவாகரத்து செய்வதை ஒத்திவைத்து அவருடன் சேர்ந்திருக்குமாறு எலினின் வழக்கறிஞர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்களாம்.

ரைகர்வூட்ஸின் சொத்துக்களில் தனக்குரியபங்கைப் பெறுவதற்காக அவருடன் தொடர்ந்து வாழ்வதற்கு எலின் தயாராகுவதாக லண்டன் "சன்" பத்திரிகை இவ்வாறும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

# தலை மாற்றம்



கணவரின் மரணச் சடங்கில் விதவை மனைவி அழுதுபுலம்பியவாறு இருந்தார். மலர்ச்சாலை மண்டபத்திற்கு கணவரின் உடல் தாங்கிய பேழை கொண்டுவரப்பட்டது. பேழை திறக்கப்பட்டபோது கணவரின் சடலத்துக்கு மண்ணிற கோட் அணியப்பட்டிருந்ததைக் கண்டு அவர் திகைத்துப்போனார்.

நீலநிறக் கோட் அணிந்தவாறே தனது சடலத்தைப் புதைக்க வேண்டும் என்பது கணவரின் ஆசை என்பதால் நீலநிறக் கோட் ஒன்றைவாங்கி மலர்ச்சாலை பணியாளர்களிடம் கொடுத்திருந்தார்.

ஆனால், அவர்களோ மண்ணிறக் கோட்டையே சடலத்துக்கு அணிவித்திருந்தார்கள். ஆத்திரமுற்ற மனைவி மலர்ச்சாலைப் பணியாளர்களிடம் ஏன் நான் வாங்கித் தந்த கோட்டை கணவரின் சடலத்துக்கு அணியவில்லை. உடனே கோட்டை மாற்றிக் கொண்டுவாருங்கள் என்று வற்புறுத்தினார்.


இறுதிக் கிரியைகள் ஆரம்பமாவதற்கு இன்னும் ஓரிரு நிமிடங்களே இருக்கின்றன. அதற்குள் ஆடையை மாற்ற வேண்டுமா என்று மலர்ச்சாலைப் பணியாளர்கள் பதிலுக்குக் கேட்டனர்.

இறுதிச் சடங்குகளுக்கான நேரம் நெருங்கினாலும் பரவாயில்லை எனது அன்புக்குரியவரின் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்வதே எனது கடமை. நீங்கள் பேழையை உள்ளே கொண்டுபோய் நீலக் கோட்டை அணிவித்து வாருங்கள் என்று அடம்பிடித்தார் விதவை.

வேறுவழியின்றி மலர்ச்சாலைப் பணியாளர்களும் பேழையை உள்ளே கொண்டு போயினர். ஆனால், வெகுசீக்கிரமாகவே பேழையைத் திருப்பிக் கொண்டு வந்துவிட்டனர். திறந்து பார்த்த போது கணவரின் சடலத்தில் நீலநிறக் கோட் அணிவிக்கப்பட்டிருப்பதை மனைவி கண்டார்.


இவ்வளவு சீக்கிரம் எவ்வாறு கோட்டை மாற்றினீர்கள் என்று பணியாளர்களிடம் அவர் கேட்க அவர்கள் அளித்த பதில்;அடுத்த மண்டபத்தில் ஒரு ஆணின் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது அச்சடலத்துக்கு நீலநிறக் கோட் அணிவிக்கப்பட்டிருந்தது. அந்த மண்டபத்திற்கு இன்னும் ஆட்கள் வந்து சேரவில்லை அதனால், நாங்கள் சடலங்களின் தலைகளை சில நிமிடங்களில் மாற்றிவிட்டோம்.

# எது புதிது?



ஒரு ஆண் தனது மனைவிக்காக கார்க் கதவைத் திறந்து விடுகின்றான் என்றால் ஒன்றில் கார் புதியதாக இருக்க வேண்டும் அல்லது மனைவி புதியவளாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடாநாட்டில் திடீர் புத்தர்கள்

யுத்த ஓய்விற்குப் பின்னர் வடக்கில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் துரித கதியில் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் மூலைக்கு மூலை காணப்படும் அரச மரங்களின் கீழ் திடீர் திடீரென முளைக்கும் புத்தர் சிலைகள்தான் மக்களை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உட்படுத்தியுள்ளது.

கலை, கலாசாரம், பண்பாடுகளைப் பாதுகாப்பதிலும் அவற்றைப் பேணி வளர்ப்பதிலும் தமிழ் மக்களுக்கு நிகர் வேறு எவருமில்லையென்றே சொல்ல முடியும். அவ்வாறான பெருமைக்குரிய தமிழ் மக்களின் கலாசார பூமியாகிய குடாநாட்டைத் தான் தற்போது புத்தர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் மக்கள் எந்த மதத்திற்கும் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. அவர்கள் தமது மதத்தை வேறு எவர் மீதும் திணிப்பவர்களோ அல்லது தமது மதத்தால் வேறு இனத்துக்கோ, மதத்துக்கோ இடையூறுகள், மனவேதனைகள், ஆக்கிரமிப்புகளை செய்பவர்களுமல்ல. அதனால்தான் குடாநாட்டில் முளைக்கும் திடீர் புத்தர்கள் தமிழ் மக்களை வேதனையடைய வைத்துள்ளன.

ஏற்கனவே, நயினாதீவில் நாக விகாரையும் ஆரியகுளம் சந்தியில் ஒரு விகாரையும் உள்ள நிலையிலேயே தற்போது குடாநாட்டின் பிரதான வீதிகள், சந்திகளுக்கருகில் காணப்படும் அரச மரங்களுக்குக் கீழ் திடீர் புத்தர்கள் மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றனர். அவர்களை நிரந்தரமாக்குவதற்கான கட்டுமானப் பணிகளும் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இராணுவ சோதனைச் சாவடிகள், இராணுவ முகாம்களுக்கருகிலேயே இவ்வாறான திடீர் புத்தர்களைக் காண முடிகின்றது. இவ்வாறான சோதனைச் சாவடிகள், இராணுவ முகாம்களில் உள்ளவர்கள் தமது வழிபாட்டுக்காக இந்த புத்தர்களை வைப்பதாக விளக்கம் கூறினாலும் எதிர்காலத்தில் இவை ஆக்கிரமிப்பு சின்னங்களாக மாறிவிடும் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஏதாவது கட்டுமானப்பணிகள் அல்லது ஆலய வேலைப்பாடுகளை முன்னெடுத்தால் கண்கொத்திப் பாம்பாகப் பார்த்துக்கொண்டு நடவடிக்கையெடுத்துக் கொண்டுமிருக்கும் மாநகரசபை, நகரசபைகள் இந்த புத்தர் விடயங்களில் மட்டும் வாய்மூடி மௌனிகளாகவிருப்பது மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்பகுதியில் குறிப்பாகக் கொழும்பில் இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் இல்லையா? அங்கு இவை உள்ளன தானே? அப்படியிருக்கையில் ஏன் வடக்கு, கிழக்கில் இவை இருக்கக் கூடாது? இலங்கையின் ஒவ்வொரு சதுர அடி நிலத்திலும் புத்தர் சிலை வைக்கும் உரிமை சிங்களவருக்கு உண்டென ஹெல உறுமய கட்சி எம்.பி.யான எல்லாவல மேதானந்த தேரர் ஒரு தடவை பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அத்துடன், முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் புத்தரினதும் விகாரைகளினதும் நினைவுப்படிகங்கள், வரலாற்றுச் சான்றுகள், கல்வெட்டுகள் இருப்பதாகவும் இதனால் அப்பகுதியில் முன்னர் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளதன் மூலம் இப்பகுதிகளில் எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை இடம்பெறலாமென தமிழ் மக்கள் அச்சமடைந்திருந்த நிலையிலேயே தற்போது குடாநாட்டை புத்தர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளனர்.

மத ரீதியான வழிபாடுகளுக்கு தமிழ் மக்கள் என்றும் எதிரானவர்கள் அல்ல. ஆனால், ஆக்கிரமிப்பு ரீதியான மத நடவடிக்கைகளையே அவர்கள் எதிர்க்கின்றனர். எனவே, எவ்விதக் காரணங்களுமின்றி உள்நோக்கங்களோடு அரச மரங்களுக்குக் கீழ் வைக்கப்படும் புத்தர் சிலைகள் மீண்டும் ஒரு பழைய யுகத்தை ஏற்படுத்தி விடலாம்.

எனவே, இவ்வாறான தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாது தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுவதே இப்போது முக்கியமானது.


எச்.ஹூஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபலங்களின் மறதி

விஞ்ஞானிகள் எப்பவும் தங்களது ஆராய்ச்சி பற்றிய நினைப்பிலேயே இருப்பர். மனைவி, குடும்பம் எதுவுமே அவர்களது ஞாபகத்தில் இருக்காது. ஒருமுறை பொஸ்டன் நகர் பெண்கள் பள்ளிக்கூடத்தில் சொற்பொழிவாற்ற ஒப்புக்கொண்டிருந்தார் தோமஸ் அல்வா எடிசன். குறித்த நேரத்தில் அவர் வந்து சேராததைக் கண்ட பள்ளி நிர்வாகி மற்றும் விழாக்குழு ஆசிரியர்கள் எடிசனைத் தேடிப் புறப்பட்டனர். பல இடங்களில் தேடி சலிப்படைந்த வேளையில் கடைசியாக நண்பரின் வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்து ஆராய்ச்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தார் எடிசன், எடிசனை அணுகி-விழாவிற்கு அழைத்தபோது...

'அடடே... மறந்தே போய்விட்டேன்... இதோ வர்றேன்' என்று அப்படியே புறப்பட்டார். மின்சக்தி பற்றி மிகவும் அற்புதமாகப் பேசினார். பாராட்டி கரகோஷம் எழுப்பிய அதேநேரத்தில் எடிசன் அணிந்திருந்த கசங்கிய ஆடைகளைப் பார்த்தனர். 'அய்யா! விழாவிற்கு நல்ல ஆடை அணிந்துகொண்டு வந்திருக்கக்கூடாதா?' என்று ஒருவர் கேட்டார். 'அது என்னோட தவறில்லை... என்னை அழைத்தவர்கள் இந்த விடயத்தை எனக்கு முன்பே நினைவுபடுத்தியிருக்க வேண்டாமா?' என்றார்.






## தெரிந்துகொள்ளுங்கள்!

*இந்தியாவில் முதல் பயணிகள் ரயில் சேவை 1853 ஆம் ஆண்டு மும்பையில் உள்ள போரி பந்தருக்கும் தாணேவுக்குமிடையே நடைபெற்றது.

* பறவைகள் குறித்த ஆராய்ச்சிகள் செய்வதில் வல்லுநராகத் திகழ்ந்தவர் சலீம் அலி.

* வேர்க்கடலை அதிகம் விளையும் நாடு இந்தியா.

* பூஜ்யத்தை அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியர்கள்.

* தாண்டியா நடனம் குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற நடனமாகும்.

* கியூபாவிற்கு அடுத்தபடியாக சீனி அதிகம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா.

*காந்தியை முதன் முதலாக மகாத்மா என்று அழைத்தவர் ரவீந்திரநாத் தாகூர்.

* லவுட்ஸ்பீக்கர் எனப்படும் ஒலிபெருக்கியை பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த ஹொரேஸ்ஷார்ட் 1900 இல் கண்டுபிடித்தார்.

* சுழல் வேகமானி எனப்படும் திசையறியும் கருவி 1911 இல் எல்மர் ஏஸ்பெர்ரி என்பவர் கண்டுபிடித்தார்.

* இடிதாங்கியை 1752 இல் பெஞ்சமின் பிராங்க்ளின் கண்டுபிடித்தார்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ✱ | 4 | ✱ |
| 5 | ✱ | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | ✱ | 13 | 14 |
| ✱ | 15 | ✱ | 16 | ✱ | 17 |
| 18 | 19 | ✱ | 20 | 21 | 22 |
| 23 | 24 | ✱ | 25 | 26 | ✱ |

**இடமிருந்து வலம்**

1. மழை வந்தால் ஆடும்
6. பொருள்
10. இந்தியாவின் தலைநகரம்
13. நண்டுக்கு இது எட்டு உண்டு (திரும்பியுள்ளது)
18. மணமகள் கழுத்தில் கட்டுவது
20 யானையை வழிநடத்துபவன் (குழம்பியுள்ளது)
23. சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்படுபவன் (திரும்பியுள்ளது)
25. ஒரு உறவு முறை

**மேலிருந்து கீழ்**

1. பாம்பு இதற்கு மயங்கும்
3. இது பலன் சொல்லும் (குழம்பியுள்ளது)
4. இதன் ஆழத்தை அளவிட முடியாது
9. காடு (குழம்பியுள்ளது)
11. வாசமுள்ள மலர் (குழம்பியுள்ளது)
16. அமெரிக்க ஜனாதிபதி
18. மருத்துவிச்சி
21. காட்டு விலங்கு (தலைகீழ்)

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

### குறுக்கெழுத்துப்போட்டி - 17 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. விவாகம் | 1. விலை |
| 6. அலை | 2. அல்வா |
| 8. தாரம் | 4. கரகம் |
| 11. கல்வி | 5. மாதா |
| 15. கனா | 12. வினா |
| 18. புகை | 14. புகழ் |
| 20. வளை | 17. வனம் |
| 22. நாகம் | 19. நகை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**சி.அன்னலிங்கம்,**
நெல்லியான் வீதி,
கல்விளான், சுழிபுரம்.

### பாராட்டுப்பெறுவோர்

01. சிறிதரன் வினித்திரா,
இல.79, கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

02. தமிழ்வேந்தன் தஸ்மியன்,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

03. தில்லைநாதன் ரஜீந்தன்,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

04. ரசிக்குமார் ஜயந்தன்,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

05. எஸ்.நாதன்,
தூசையப்பர் ஆலய வீதி,
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

உங்கள் விடைகளை
**'Saturday மெயில்'**
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## விடுகதை

1. அது ஓர் அழகு தேவதை, ஆடும் தேவதை. அது என்ன?
2. அகன்ற வாய் உடையவன், திறந்த வாய் மூடாதவன். அவன் யார்?
3. கண்ணால் பார்க்கலாம், கையால் பிடிக்க முடியாது. அது என்ன?
4. காலில்லாத பந்தலைக் காணக் காண விநோதம். அது என்ன?
5. சட்டையைக் கழற்றியதும், சடக்கென்று உள்ளே விழும். அது என்ன?
6. தண்ணீர் இல்லாமல் வளரும், தரையில்லாமல் படரும். அது என்ன?
7. கனிக்கெல்லாம் கனி, திகட்டதா கனி. அது என்ன?
8. ஒரு கிணற்றில் ஒரே தவளை. அது என்ன?
9. உருவம் உண்டு, உயிர் இல்லை. அது என்ன?

1. மயில்
2. செக்கு
3. நிழல்
4. வானம்
5. வாழைப்பழம்
6. தலைமுடி
7. பிள்ளைக் கனி
8. நாக்கு
9. சட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்நெல்லுக்குப் பதிலாக மஞ்சள் அரிசி!

முனைவர் மலையமான்

பழங்காலத் தமிழ் மக்கள் அழகின் வீடாகிய இயற்கையை வியந்தார்கள். விழியாலும் அதைப் போற்றினார்கள். விரும்பி வழிபட்டார்கள். இறைவனுக்குரிய முதன்மை வழிபடு பொருளாக இயற்கையை அமைத்துக் கொண்டார்கள். இயற்கை அழகை விழைவுடன் போற்றிய மரபு இப்படித்தான் பிறந்து வளர்ந்து தலைமை பெற்றது.

மனதை மயக்கிய இயற்கைக்கு அடுத்தபடியாக மனித வாழ்க்கைக்கு மிகவும் பயன்பட்ட பொருளைப் போற்றும் பழக்கம் ஏற்றம் பெற்றது. வேட்டையாடி காட்டில் உணவு தேடுவதையே நாளும் நாடிய தொழிலாகக் கொண்டிருந்த மக்கள் வழிவந்த முறையைக் கைவிட்டனர். ஓரிடத்தில் கால் ஊன்றினர். விழுமியத் தொழிலாகிய உழவை மேற்கொண்டனர். மூங்கிலில் விளைந்த நெல்லை வயல் பயிர்தாங்கும் செந்நெல்லாக மாற்றினர். அந்த உணவு நெல் அவர்களுடைய மிக முக்கிய பொருளாகவும் பெரிதும் விரும்பிப் போற்றப்படும் முதன்மைப் பொருளாகவும் ஆனது. அதனையும் தலை மேற் கொண்டனர். தொலைநாள் தமிழ் மகள் பூவோடு நெற்கதிரையும் தலைமுடியில் சூடி மகிழ்ந்தாள். இப்படி நெல்லுக்கு வாடாப் பெருமையைக் கொடுத்தாள். இதனை,

**'செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு**
**தடந்தாள் ஆம்பல் மலரொடும் சூடி'**

என்று சங்க இலக்கியமாகிய அகநானூறு (78:17-18) அறிவிக்கிறது. இந்தப் பழக்கம் தொடர்ந்து நெடுங்காலம் நடைமுறையில் இருந்தது என்பதை

**'தளையவிழ்ப் பூங்குவளை மதுவிள்ளும் பைங்குழல்**
**கதிர்நெல் மிலைச்சியர்'**

(திருநாளைப்போவார்-10)

என்று பெரியபுராணம் அறிவிக்கிறது. மேலும், நெற்கதிருடன் அறுகம் புல் குவளைமலர் ஆகியவற்றையும் சேர்த்து மாலையாகக் கட்டிச் சூடிக் கொண்டார்கள் தமிழர்கள் என்று சிலப்பதிகாரம் சொல்கிறது.

**'தொழுங்கொடி அறுகையும் குவளையும் கலந்து**
**விளங்குகதிர் தொடுத்த விரியல் சூட்டி'**

(சிலம்பு:10132-133)

என்ற வரிகள் அந்தப் பழக்கத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது. தலைமேல் வைத்து மகிழ்வு நிலையில் போற்றப்பட்ட நெற்கதிர் பிறகு இறை வழிபாட்டுக்கும் உரிய பொருளாக மாறியது. வீரச்செயல் அல்லது அருஞ்செயல் புரிந்தபோது இறந்த ஒருவனுக்கு முன்பு நடுகல் அமைக்கப்பட்டது. இதைத் தொல்காப்பியம் சொல்லும். நடப்பட்ட நினைவுச்சின்னமான நடுகல் பின்பு தொழப்படும் புனிதத் தன்மையைப் பெற்றது. அப்போது அதை நெல் தூவி வணங்கும் முறை தொடங்கியது.

**'கல்லே பரவின் அல்லது**
**நெல்லுக்குத்தும் பரவும் தெய்வமும் இலவே'**

(புறம்:335 11-12) எனப் புறநானூறு கூறுகிறது. கடவுள் சிலையின் முன் அடி பணிந்த பழக்கமும் நிலை பெற்றது.

**'இரும்செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ**
**நெல்லொடு மலரும் தூஉய்க் கைதொழுது'**

என்று நெடுநல்வாடை (42-43) சொல்கிறது.

நெல்லொடு முல்லைப் பூவைக் கலந்து தூவப்பட்ட நடைமுறையை முல்லைப்பாட்டு (8-10) கூறுகிறது.

**'அகநக ரெல்லாம் அரும்பவிழ் முல்லை**
**நிகர்மலர் நெல்லொடு தூய்'**

(சில. 9:1-2) என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

பழந்தமிழர் மணமக்களை மலரும் நெல்லும் தூவி வாழ்த்தினார்கள் என்று அகநானூறு வழி அறிகிறோம்.

**'நீரோடு சொரிந்த ஈரிதழ் அலரி**
**பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தூய்'**

(அகம்:86-15-16)

ஸ்கொட்லாந்தில் நெல்லைத் தூவி மணமக்களை வாழ்த்தும் பழக்கம் சில குடும்பங்களில் உள்ளது என்று ஒரு பாதிரியார் சொன்னதாக சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேரா.ந.சஞ்சீவி கூறியுள்ளார். நெல்லைத்தூவி மணமக்களை வாழ்த்தும் முறை பிறகு அரிசிதூவி வாழ்த்தும் முறையாக மாறியது. மணமக்களை நோக்கி வீசி எறியப்பட்ட நெல்லின் கூர்முனை மக்களின் கண்ணில் பட்டோ பிற வகையாலோ பாதிப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடும். தரையில் விழுந்த நெல் பாதத்தில் தைத்திருக்கக்கூடும். இப்படி உடலுக்கு ஊறு விளைவித்த காரணத்தால் நெல்லுக்குப் பதிலாக அதன் உள்ளீடான அரிசியைத் தூவி வாழ்த்தும் முறை பிற்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.

கம்பு,கேழ்வரகு,சோளம் போன்று உருண்டை வடிவமாக இல்லாமல் நீளமான,நெட்டையான உருவம் கொண்டிருந்த காரணத்தால் நெ என்ற மூலத்தின் அடிப்படையில் நெல் என்ற தமிழ்ச்சொல் பிறந்தது. உள்ளிருக்கும் பொருளைக் குறிக்கும் 'அரி' என்பதன் அடிப்படையில் 'அரிசி' என்பது வந்தது. காற்சிலம்பின் உள்ளே இருக்கும் மாணிக்கம் அரி எனப்படும்.

இறந்த தமிழனுடைய வாயில் இறுதியாக உண்ட அரிசிச் சோற்றை வைத்து வழியனுப்பும் பழக்கம் முன்பு இருந்திருக்கிறது. இது வாய்க்கரிசி என்று கூறப்பட்டது. அது இயல்பான வெள்ளை நிறத்துடன் இருந்தது. இறைவனை வணங்கும்போது உயிர்ப் பலி தரும் பழக்கம் அண்மைக் காலம் வரை நிலவியது. காளி வணக்கத்தில் இது கட்டாயமாக இடம்பெற்றிருந்தது. வெட்டப்பட்ட விலங்கின் இரத்தத்துடன் அரிசியைக் கலந்துவீசும் முறை இருந்தது என்பதை,

**'குருதியோடு கலந்த தூவெள்ளரிசி**
**சில்பலி செய்து'** (233-34)

என்று திருமுருகாற்றுப்படை உரைக்கும்.

இறந்தவனுக்குத் தரும் அரிசி வெண்ணிறமானது. வழிபாட்டுக்குரிய

இலக்கிய சுவை...

அரிசி செந்நிறமானது. ஆகவே, வாழ்த்துக்குரிய அரிசியை வேறுபடுத்திக்காட்ட வேண்டியது இன்றியமையாக் கூறானது. நெல்லின் மேற்புறம் ஏறத்தாழ மஞ்சள் நிறங்கொண்டது. நெல்லுக்குப் பதிலாக வாழ்த்தப் பயன்படும் அரிசிக்கு மஞ்சள் நிறம் ஏற்றினால் பொருத்தமாக அமையும் என்ற கருத்து உதயமானது. மஞ்சள் நிறம் மங்கலத்துக்குரியது என்ற உணர்வும் துணைபுரிய இந்த இரண்டு எண்ணங்களின் அடிப்படையில் மஞ்சள் நிறம் ஏற்றப்பட்ட அரிசி-மஞ்சள் அரிசி மணமக்களை வாழ்த்துவதற்கும் பிற மங்கல நிகழ்ச்சிகளுக்கும் தகுதியான இடத்தைப் பெற்றது. மணமக்களை வாழ்த்த மட்டுமன்றி, பிறரை மங்கலமாக இருக்க வாழ்த்தவும் மஞ்சள் அரிசி தூவும் பழக்கம் இன்றளவும் தமிழரிடையே இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அரசியல் வேண்டாம் - அஜித்

சினிமா நட்சத்திரங்களில் அஜித் ரொம்பவே வித்தியாசமானவர். தான் நடித்த படம் வெளியாவதற்கு முன்பாக பத்திரிகையாளர்களைச் சந்தித்து அந்த படம் குறித்து பேசுவது அஜித்தின் தனித்துவங்களில் ஒன்று. அசல் படம் தொடர்பாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் அஜித்.

அப்போது அவர் அசல் படம் குறித்து நிருபர்களிடம் ரிலாக்ஸாகப் பேசினார். கேள்வி-பதிலுக்கு என நேரம் ஒதுக்காவிட்டாலும் நிருபர்கள் அஜித்திடம் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். அனைத்திற்கும் அவர் சிரித்துக்கொண்டே பதில் அளித்தார். அரசியல் பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த அஜித், என் படங்களை அரசியல்வாதிகளும் பார்க்க வேண்டும். அதனால்தான் எனக்கு அரசியல் வேண்டாம் எனச் சொல்கிறேன். ஜெயிச்சவங்க சந்தோஷத்தைக் கொண்டாடுறதுக்காக என் படங்களைப் பார்க்கணும். தோற்றவங்க ஆறுதலுக்காக என் படத்தைப் பார்க்கணும் என்றார். அல்டிமேட் ஸ்டார் பட்டம் குறித்த கேள்விக்கு பதில் அளிக்கையில்; ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் எவ்வளவோ மாற்றங்கள் வரும். இன்றைக்கு இருக்கிற சினிமா ரசிகர்கள் ரொம்பவே மாறியிருக்கிறார்கள். அதனால்தான் இனிமேலும் அல்டிமேட் ஸ்டார் பட்டம் போட்டுக்கணுமா னு யோசிச்சேன். வேண்டாம்னு முடிவு பண்ணிட்டேன் என்றார். அசல் படத்தில் இணை இயக்குநராக இருந்தது பற்றிய கேள்விக்கு எதிர்காலத்தில் படம் இயக்கும் ஆசை இருக்கிறது. ஆனால், அதை உடனடியாகச் செய்து விடமாட்டேன். நிதானமாக இன்னும் பல அனுபவங்களைச் சேர்த்துக் கொண்டு படம் இயக்குவேன் என்றார்.

## Saturday சினிமா

## மீண்டும் இந்தியில் பிரபுதேவா

சல்மான் கானின் புதிய படம் வீர் பெருத்த அடி வாங்கியிருக்கிறது. அமீர் கான், ஷாருக்கான், சல்மான்கான் என்ற மூன்று கான் கூட்டணியில் இப்போது சல்மான்கான் தான் மிகவும் பின்தங்கியிருக்கிறார். இந்த இடைவெளியைக் குறைக்க என்ன செய்வது என்ற யோசனை சல்மானை மீண்டும் பிரபுதேவா பக்கம் திரும்ப வைத்திருக்கிறதாம். பிரபுதேவா இயக்கிய வான்டட் சல்மான்கானுக்கு பெரும் வெற்றியாக அமைந்தது. வான்டட் போல இன்னொரு ரீமேக் கிடைத்தால் இடைவெளியைக் கணிசமாகக் குறைக்கலாம் எனக் கருதிய சல்மான், அடுத்து பிரபுதேவா இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்கப் போகிறாராம். மலையாளத்தில் சித்திக் இயக்கிய பொடிகாட் படத்துக்குக் கேரளா தாண்டியும் எதிர்பார்ப்பு. இதன் தமிழ் ரீ மேக்கில்தான் அடுத்து விஜய் நடிக்கப் போகிறார். இந்தப் படத்தைப் பார்த்த போனிகபூர் பொடிகாட்டின் இந்தி ரீ மேக் உரிமையை வாங்கியிருக்கிறாராம். சல்மான் கானுக்காகவே இந்த ரீ மேக் உரிமையை அவர் வாங்கியிருப்பதாகவும் பிரபுதேவா படத்தை இயக்குவார் எனவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஐஸ் சம்பளம் 30 கோடி ரூபா



முன்னாள் உலக அழகியும் பொலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் புதிய படமொன்றில் நடிக்க இலங்கை ரூபாயில் 30 கோடி ரூபா சம்பளம் வாங்கப் போகிறார். பிரபல பொலிவுட் தயாரிப்பாளர் பாபி புஷ்கர்ணா பேஜ் 3 என்ற படத்தின் மூலம் புகழ்பெற்றவர். தேசிய விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றிருக்கும் பாபி, புதிதாகத் தயாரிக்கவுள்ள படத்தில் ஐஸ்வர்யா ராயை நாயகியாக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இதற்காக ஐஸ்வர்யாவுக்கு 30 கோடி வரை சம்பளம் வழங்க முன்வந்திருக்கிறாராம். இதுபற்றி அவர் கூறுகையில்; 2008 ஆம் ஆண்டு ஜோதா அக்பர் படம் வெளியானது. அந்த படத்துக்குப் பிறகு ஐஸ்வர்யா ராய் படம் எதுவும் வெளியாகவில்லை. எனது அடுத்த படத்தில் நடிக்க ஐஸ்வர்யா ராயின் சம்மதத்தைக் கேட்டிருக்கிறேன். இதற்காக அவருக்கு ரூ. 30 கோடி வரை சம்பளம் பேசியிருக்கிறேன். அவர் எனக்கு இன்னமும் கால்ஷீட் தரவில்லை. அவரது கால்ஷீட் கிடைக்காவிட்டால் அந்தப் படத்தையே எடுக்க மாட்டேன் என்றார்.

## போனியை கரம்பிடிக்கும் செல்லம்

பிரகாஷ்ராஜ் தனது மனைவி லலிதாகுமாரியை விவாகரத்து செய்ய முக்கிய காரணமாக இருந்தவர் போனி வர்மா. பொலிவுட்டின் நடன இயக்குநர் போனி வர்மாவுடன் ஏற்பட்ட பழக்கம் காரணமாகவே பிரகாஷ்ராஜ் தனது மனைவியை விவாகரத்துச் செய்ய முன்வந்தார் என சில மாதங்களுக்கு முன் எழுதினோம். போனி வர்மா விடயம் பரபரப்பாக சில நாட்கள் பேசவும்பட்டது. லலிதா குமாரியை விவாகரத்துச் செய்த நிலையில் போனி வர்மாவை மணக்கத் திட்டமிட்டிருக்கிறார் பிரகாஷ்ராஜ். இந்த வருடம் இவர்கள் திருமணம் நடக்கும் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள். விரும்பி காதலித்து திருமணம் செய்தவரையே விவாகரத்துச் செய்திருக்கிறார். இதில் இடையில் வந்த போனி வர்மாவை எவ்வளவு நாள் காதலிப்பார்? எதற்கும் போனி வர்மா [illegible]ராக இருப்பது நல்லது.



தம்பிக்கோட்டை - சங்கீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதார் நடிகருடன் மல்லிகா

அவதார் பட நடிகர் லொஸ் அலோன்சாவுடன் ஒரு அரசியல் நகைச்சுவை படத்தில் ஜோடி சேர்ந்துள்ளார் மல்லிகா ஷெராவத்.லவ், பாரக் என்ற பெயரில் ஹொலிவுட்டில் உருவாகும் படம் இது. இதில் லொஸ் அலோன்சாவுடன் இணைந்து நடிக்கிறாராம் மல்லிகா ஷெராவத். அமெரிக்க இயக்குநர் டோக் மெக்கென்றி இப்படத்தை இயக்குகிறார். அரீதா குப்தா என்ற படத்தில் நடிக்கிறாராம் மல்லிகா. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்ட கதை இது. ஜனாதிபதி ஒபாமாவின் ஆதரவாளர்கள் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இதில் வருகிறார் மல்லிகா. கதை என்னவென்றால், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் அரீதா குப்தா. ஒபாமாவுக்காக தீவிர பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார். அப்போது எதிர்பாராத விதமாகக் குடியரசுக் கட்சியின் ஜோன் மெக்கெய்னுக்காகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அலோன்சாவுடன் காதல் மலர்ந்து விடுகிறது. இந்தக் காதலை அரசியல் பின்னணியில் அட்டகாசமாகச் சொல்கிறார்களாம். இப்படத்தில் இது குறித்து மல்லிகா கூறுகையில்; மிகவும் அருமையான, திறமையான, ஆச்சரியகரமான நடிகர் லொஸ். அவருடன் பணியாற்றுவதை அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன் என்றார்.





விண்ணைத்தாண்டி வருவாயா - சிம்பு

# அஜித், விஜய், விக்ரம் இணைந்து ஆட்டம்

அஜித்தும் விஜய்யும் சேர்ந்து பேசினாலே சிலிர்த்துப் போகிறது நாடு. சேர்ந்து ஆடினால்? அட... இது எப்போ? மேட்டரில் மேலும் கொஞ்சம் சர்க்கரையைப் போட்டுக் கொள்ளுங்கள் நண்பர்களே. இந்த இரண்டு பேருடன் சேர்ந்து விக்ரமும் ஆடப்போகிறாராம்! இன்று ஆறாம் திகதி முதல்வர் கலைஞருக்கு நடக்கவிருக்கும் பாராட்டு விழாவில் தான் இந்த ஆட்டத்தைப் போடப் போகிறார்கள் மூவரும். பொதுவாக எந்த விழாவாக இருந்தாலும் சைலண்டாக ஓட்டமெடுப்பதுதான் அஜித்தின் வழக்கம். அப்படி வந்தாலும் எவ்வித ஆர்ப்பாட்டத்திற்கும் இடம்கொடுக்காமல் அமைதியாக ரசித்துவிட்டு கிளம்பிவிடுவார். ஆனால், ஃபெப்சி தொழிலாளர்களுக்கு முதல்வர் நிலம் கொடுக்கிறார் என்றதும் தாமே முன்வந்து விருப்பம் தெரிவித்தாராம். முதல்வர் கலைஞர் எழுதி ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்கும் அந்தப் பாடலுக்குத் தான் இந்த மூவரும் மேடையேறப் போகிறார்கள். வரலாற்று சிறப்புமிக்க இந்தப் பாடலில் அஜித்-விஜய் சேர்ந்து ஆடுகிறார்கள் என்பதும் கூடுதல் அட்ராக்ஷன் தானே?

# சுறாவில் சுனாமி



மலையாளத்தில் வெளியான சோட்டா மும்பை படத்தின் தழுவல் சுறா என்று சொல்லப்பட்டாலும் அதற்கு முற்றிலும் மாறுபட்ட காட்சிகளுடன் உருவாகி வருகிறது விஜய்யின் 50 ஆவது படம். முக்கியமாக விஜய் சம்பந்தப்பட்ட அறிமுகக் காட்சி இதுவரை தரைக்கு அடியிலிருந்து பாய்ந்து வருவது, வானத்திலிருந்து குதிப்பது என்று விதவிதமாக விஜயின் அறிமுகக் காட்சியை அமைத்திருக்கிறார்கள். கடல் மட்டும்தான் பாக்கி. சுறாவில் அதையும் விடவில்லை. சுனாமி அலைகளுக்கு நடுவே விஜய் படகு ஓட்டி வருவதுபோல் அறிமுகக் காட்சியை அமைத்திருக்கிறார்களாம். சுனாமியில் வீடு இழந்தவர்களுக்கு விஜய் உதவுவதுதான் படத்தின் மையப் பகுதி என்றும் கூறப்படுகிறது. இதுவரை மனிதர்களைத்தான் வம்புக்கிழுத்தார்கள். இப்போது சுனாமி எனும் இயற்கையையும் சவாலுக்கு இழுத்திருக்கிறார்கள். மீதி சுறாவில் இன்னும் என்னென்ன வேடிக்கை காட்டப்போகிறார்களோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோ'வில் விலகினார் சிம்பு



ஆஹா, மாறிட்டாருன்னு சந்தோஷப்பட்டா முனிநம்ம மேலேயே பாஞ்சிருச்சு. கோ படத்தில் சிம்புவின் தொழில் பக்தின்னு நாம் சந்தோஷப்பட்டு முழுசா 24 மணிநேரம் ஆகலே. அதற்குள் அந்த படத்திலிருந்தே விலகி விட்டார் சிம்பு. பின்னணியில் என்ன நடந்தது? எல்லாம் நல்லாதான் போயிட்டு இருந்திச்சு. தமன்னாவை மாற்றியதில் இருந்துதான் பிரச்சினையே என்கிறார்கள் கோ யூனிட்டில். கார்த்திகாவை என்ன காரணத்தினாலோ ஒப்புக்கொள்ளவே இல்லையாம் சிம்பு. இதற்கிடையில் வாலிபன் படத்தை உடனே தொடங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறாராம் அப்படத்தின் தயாரிப்பாளர் நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி. இந்தக் காரணத்தினாலும் கோ படத்திலிருந்து அவர் விலகியிருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். குழப்பமே இல்லாமல் படம் இயக்குவதுதான் என் பாணி. சிம்பு வாலிபன் படத்திலேயும் கவனம் செலுத்திக்கொண்டு என் படத்திலும் நடிப்பதென்பது நமக்கு சரிப்படாது என்கிறாராம் ஆனந்த்.

## இவ்வார மெயிலில் இவர்...



# சலீல் ஷெட்டி

உலகளாவிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபையின் அடுத்த செயலாளர் நாயகமாக இந்தியாவின் பெங்களூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சலீல் ஷெட்டி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்தவர்கள் அண்மைக் காலமாக சர்வதேச அமைப்புகளின் உயர் பதவிகளில் இருந்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை, தென்னாபிரிக்காவில் வசித்தாலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். அமெரிக்க அரசின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பான அக்ஷன் எயிட் நிறுவனத்தின் தலைவரான ராஜீவ் ஷா, ஐ.நா. சிறுவர் உரிமை விவகாரத் தலைவர் ராதிகா குமாரசுவாமி உள்ளிட்டவர்களின் வரிசையில் தற்பொழுது சலீல் ஷெட்டியும் இணைந்துள்ளார்.

எமது அயல்நாட்டைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறான உயர்பதவி ஒன்றிற்கு நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு இந்திய மக்களுடன் இணைந்து நாமும் பெருமையடையவேண்டும்.

இந்தியாவின் பெங்களூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சலீல் ஷெட்டி [33 வயது] பெங்களூர் சென். ஜோசப் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியைப் பயின்று, பெங்களூர் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் துறையில் பட்டதாரியானார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பட்டப்பின் கற்கை நெறிகளில் உள்நாட்டு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்து பின்னர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றிய சலீல் ஷெட்டி 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரமாம் திட்டத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து புத்தாயிரமாம் இலக்குகளை அடைவதற்கு முக்கிய பங்கேற்றுச் செயற்பட்டவராக சலீல் ஷெட்டி வெகுவாகப் பாராட்டப்படுகின்றார்.

அதேவேளை, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்காவின் அமைப்பான அக்ஷன் எயிட்டிலும் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் சலீல் ஷெட்டி பணியாற்றியுள்ளார்.

அத்துடன் சஸ்ஸெக்ஸிலுள்ள அபிவிருத்திக் கற்கைகளுக்கான நிலையம், லண்டனிலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிலையம் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் அமெரிக்க இந்திய அமைப்பின் ஆலோசனைச் சபை மற்றும் அமெரிக்க புதுமைகளுக்கான அல்லது கண்டுபிடிப்புகளுக்கு தொழில்நுட்ப நூதனசாலை ஆகிய அமைப்புகளிலும் ஷெட்டி பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில், சலீலின் திறமைகளை அடையாளம் கண்ட சர்வதேச மன்னிப்புச் சபை அதன் செயலாளர் நாயகம் பதவிக்கு சிபாரிசு செய்துள்ளது.

இதுவரை சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகமாக பதவி வகித்த ஐரீன் கானின் பதவிக்காலம் கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில் வரும் ஜூன் மாதம் சலீல் பதவியேற்கவுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையைப் பொறுத்தவரையில் நடுநிலையாகச் செயற்பட்டு வரும் ஒரு மனித உரிமை கண்காணிப்பகமாகும்.

இதன் செயற்பாடுகள் என்றும் குற்றம் செய்பவர்களையும் மனித உரிமைகளை மீறிச் செயற்படுபவர்களையும் வெளிக்கொணர்வதாகவே உள்ளது.

எந்த அரசாங்கமோ தனிப்பட்ட நபரோ குற்றமிழைக்குமிடத்து எதுவிதமான பாரபட்சமும் இன்றி அது குறித்த கண்டனங்களையும் அதிருப்தியையும் வெளியிடும்.

அந்த வகையில் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு உலகளாவிய ரீதியில் நன்மதிப்பு இருந்து வருகின்றது.


இந்நிலையில் இந்தியர் ஒருவர் அதன் தலைமைப் பீடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளமை அநேகராலும் குறிப்பாக ஆசிய நாட்டவர்களால் வரவேற்கத்தக்கதே.


ஆனால் அவரின் செயற்பாடு சர்வதேச மன்னிப்புச் சபையின் நீதி வழுவா நடுநிலைமைத் தன்மையை பாதிக்காமல் இருந்தால் சலீல் ஷெட்டிக்கும் நல்லது சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் நல்லது.


சர்வதேச அமைப்பொன்றிற்கு தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்யுமிடத்து எமது இனம், மொழி, நாடு என்பவற்றை மறந்து நாம் அனைவரும் உலகமக்கள் என்ற எண்ணத்துடன் செயற்பட வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.


**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர முடியாத...!

இயந்திர மயமான
அந்த நகரில்
நடந்துகொண்டிருக்கிறேன்?
தூசுதட்டி வெள்ளை அடித்த
மாடிகள்
போர்வையால் போர்க்கப்பட்டு
குடைகள் நிமிர்த்தப்பட்ட
பெரியார்களின் சிலைகள்

என் பயணமோ?
கொட்டும் மழையில்!
சல்லிகள் இட்டு நிரப்பி
வடிவமைத்த பாதைகள்
ஓரமாய் ஒட்டிய வயிற்றுடன்
ஒடுங்கிக்கிடந்தன நாய்கள்
கூடவே 'பிச்சைக்காரன்' எனும்
புனை பெயர் உடைய

என் இனத்தவர்!
வாகனங்கள் புகைகக்கி விரைந்தன
முடிவுகள் இன்றிய-அந்த
பயணம்போல்
என் பயணமும் முட்டி மோதி
முகவரி தெரியாமல்...?

**மாவை நா.கஜேந்திரா**
**(சங்கானை)**

## இனிய ஆசைகள்

நூறுவயதாகும் வரை ஓடிவிளையாட
நோயில்லா மேனி வேண்டும்
பலகலைகள் தான் காற்று-அதை
முறையாய் பற்றிக்கொள்ளல் வேண்டும்
கவி மொழி அனைத்தும் தெரிந்து
பல கவிதைகளை புனைய வேண்டும்
புவியிலே புதுமையாய் ஏதேனும்
புரிய வேண்டும்.

எனை விட்டு கடுகளவும் பிரியா
அன்பான அம்மா வேண்டும்
அறிவுரைகளை அற்புதமாய் அளிக்க
அறிவுமிகும் அப்பா வேண்டும்
துன்பம் எனை தீண்டும் போது-எனக்கு
இன்பமாய் இருக்கும் இளங்கிளிகள் வேண்டும்

இவை விட நல்வழியிலே எனை செலுத்த
நல்ல நண்பன் வேண்டும்!

இறுவரை உன்பால் வைக்கும் அன்பு-
இறைவா
என்றும் நீங்காதிருக்க வேண்டும்.

**அரியாலையூர் சி.குருபரன்**




## காலங்கள் கடந்தன

ஆடியில் பார்த்தாய் காதல் வந்தது
ஆவணியில் பார்த்தாய் என்ன வந்தது
என்னிடமே வலிய வந்தவன் நீ
ஏனோ காரணம் பிரிந்துவிட்டாய்
நல்லவன் என நீ சொன்னாய்
நம்பினேன் நானும் உன்னை
ஆறு வருடங்கள் செல்லட்டும் என்றாய்
அவசரமாய் சரியென்றேன்
ஏழாவது வருடமும் ஆனது ஆனால்-நீயோ
ஏமாற்றிவிட்டு இன்னொருத்தியுடன்
சுகமாக வாழ்கிறாய்
சுவையாக வாழ வாழ்த்துக்கள்

**வி.கிரிஜா**

## இழப்பு

என் மனவெளியில்....
விதைக்கப்பட்ட வலிகளில் இருந்துதான்....
வாழ்விருப்பின் அடையாளம்
அர்த்தப்படுத்தப்பட்டது
அவ்வலியின் உச்சமே என்னுள்....
மலை சுமக்கும் மறத்தையும் தந்தது.
என்ஸ்தல யாத்திரிகைகள் ஒவ்வொன்றும்,
தங்குமடங்களிலேயே,
நிறைவுற்றுப் போயினவெனினும்....
மாற்றீடாய்....
தங்குமடங்களைத் தரிசனத்துக்கான
ஸ்தலங்களாய் ஆக்கும் திறனைத் தந்ததும்
அவ்வலிகளே!
வலிகள் ஏனோ? வற்றாத ஊற்றாய்....
பீறிட்டுக் கொண்டிருந்தன.
இருந்துமென் மனவாழும் அறியாமலவை
தோற்றே போயின.
'குருசேஷ்த்திரத்தில்' என்வாழ்வு
பாண்டவர்கள் பக்கத்தில் இருந்தாலும்....
'துரியோதனன்' எனக்கு,
உயிர்ப்பிச்சை தந்துள்ளான்.
அர்ச்சுனன் கையில் 'நாகஸ்திரம்'
இருந்திருந்தால்.... அது,
பல முறை ஏவப்பட்டிருப்பதுடன்,
பல தலைகளையும் கொய்திருக்கும்.
காக்கப்பட்டவன் எவனெனினும்....
'காத்தவன்' கடவுளல்லவா!
கணமேனும் அவனை,
'மறக்கிலேன்' ....!

**கவிஞர்: சு.க.சிந்துதாசன்**

## பூந்தென்றலே...

புயல் காற்றுடன் சண்டைபோட்டு
யுத்த பூமியை முத்தமிட்டு
நதியிலே மிதந்து தரையில்புரண்டு
மலர்வதனத்தில் தவழும்
பூந்தென்றலே அகதியான
என் வாசலுக்கு ஏன் வரவில்லை...

உலகை சுற்றிவரும் வசந்தமே
கொடுமை யுத்தத்தில் இறந்த என்
உறவுகளின் பரிதவிப்பை
சுமந்து வா பூந்தென்றலே...
காத்திருக்கிறேன்
முட்கம்பி வேலிக்குள்
உன் வரவுக்காக

**சிவராசா நிதர்சினி**
**அத்தியடி, ராசாவின் தோட்டம்.**


## மக்கள் வாழ...

யுத்தங்கள் வேண்டாம்
இரத்தங்கள் சிந்த
அவலங்கள் வேண்
டாம்
அவஸ்தைப்பட
அழுகையும் வேண்
டாம்
கண்ணீர் சிந்த
வேதனை வேண்டாம்
வலித்துக்கொள்ள
வேடிக்கை வேண்டாம்
பார்த்துக்கொள்ள
துன்பங்கள் வேண்டாம்
துயரப்பட
பஞ்சங்கள் வேண்டாம்
பசியில் வாட
பாறைகள் வேண்டாம்
தலையை மோத
நஞ்சுகள் நாவில்
போடவேண்டாம்
நெஞ்சங்கள் வேண்டாம்
வேதனை கொள்ள
கொள்ளைகள் வேண்டாம்
கெட்டவனாக
கொடுங்கோல் வேண்டாம்
மக்கள் சாக
கேவலம் வேண்டாம்
சீர்கெட்டுப்போக
மோகங்கள் வேண்டாம்
ஊடல் கொள்ள
காமங்கள் வேண்டாம்
சவடல் கொள்ள
காயங்கள் வேண்டாம்
புண்ணாய்ப் போக
ஆசை வேண்டாம்
வாழ்க்கை போட
அச்சம் வேண்டாம்
பயந்து வாழ
மாத்திரை வேண்டாம்
[illegible]
அலங்காரம் வேண்டாம்
அனுபவிக்க
நோய்கள் வேண்டாம்
பிணிகள் வர
பேய்கள் வேண்டாம்
பிணங்கள் தின்ன
பிடிவாதம் வேண்டாம்
பீடைகொள்ள
சின்ன வீடு வேண்டாம்
சிக்கலில் போக
பாவங்கள் வேண்டாம்
பழியைத் தேட
திருட்டுகள் வேண்டாம்
சிறையில் வாட
மமதை வேண்டாம்
மனிதன் வாழ
சோவிகள் வேண்டாம்
சொரட்டுப்பட
சோதனை வேண்டாம்
வேதனைப்பட
பொறாமை வேண்டாம்
பொல்லாங்கு தேட
போக்கிரி வேண்டாம்
பொறிக்கியாக
மஞ்சங்கள் வேண்டாம்
பஞ்சனை கொள்ள
மாடங்கள் வேண்டாம்
மாந்தர்கள் வாழ
மாலைகள் வேண்டாம்
மகுடம் ஏற
மாளிகை வேண்டாம்
மக்கள் வாழ.

**சி.ஜெகன்**
**சுழிபுரம்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைப்பவர் யாரோ புற்றுநோய்... சிறுவர் குருதியிலா?

புகைப்பதால் சுவாச நோய்கள், புற்றுநோய்கள் வரும் என்பது யாவரும் அறிந்தது. இதைவிட சிகரெட் பெட்டிகளில் கூட இவ் வசனங்கள் விளம்பர வாக்கியங்களாக பயன்படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்தது. எனினும் இங்கு புகைப்பவர் பற்றி கருதவில்லை. புகைப்பவரின் புகையை சுவாசிக்கும் குழந்தைகள் குருதிப் புற்று நோய்க்கு ஆளாவது அண்மைக்கால ஆய்வுக் கற்கைகளை நிரப்பிய வண்ணமே உள்ளன.

உடலில் காணப்படும் குருதியானது இதயத்தின் வலிந்த பாய்ச்சுகையால் உடலில் சுற்றி ஓட்டப்படுகிறது. இதனால் குருதியானது அதாவது உடலில் காணப்படும் குருதியின் எந்தவொரு துணிக்கையும் சுவாசப்பை போன்ற அங்கங்களை பல தடவைகள் கடக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றன. அதாவது ஒரு வட்டப்பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் ஓட்டவீரர்கள் எப்படியும் ஒரு குறித்த இடத்தில் காணப்படும் கம்பத்தை ஒவ்வொரு முழுச் சுற்றின் பின்னும் கடக்க வேண்டியே அமையும். இவ்வாறே சுவாசப்பையைக் கடக்கும் போது தான் காவி வந்த $CO_2$ காபனீரொட்சைட்டை மற்றும் கழிவுகளை விட்டு விட்டு சுவாசக் காற்றை காவிச் செல்கின்றது.

இங்கே சுவாசக் காற்று என்னும் போது நாம் சுவாசிக்கின்ற வளி. இதில் சிகரெட் புகையும் சேர்ந்தே காணப்படும். புகைப்பவர்களால் வெளியிடப்படும் புகையானது கணிசமான அளவில் வீட்டின் சூழலில் தங்கிவிடுகின்றது.

இப்புகையானது சிறுவர், சிறுமியரின் சுவாசக் காற்றில் காத்திரமான பங்கை வகிக்கும்.

புகைத்தலின் மூலம் சூழலுக்கு வெளிவிடப்படும் இரசாயனப் பதார்த்தங்களைப் பட்டியலிட்டால் அது நீண்டு கொண்டே செல்லும்.

இங்கு முக்கியமாக பென்சீன் வகை வேதிப் பொருளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த இரசாயனப் பொருள் சிறுவரின் சுவாச வளியூடு நுரையீரலை அடைந்து தொடர்ந்து குருதியினூடு பாய்ச்சப்பட்டு முழுக் குருதியிலும் பயணிக்கும்.



மேற்படி பென்சீனானது குருதியின் கலங்களின் உருவாக்கத்தில் பெரிதளவில் மாறுபாடுகளை ஏற்படுத்தவல்லது. குருதியானது திரவம், கலம் என்றும் உட்கட்டுமானத்தை உடையது. இப்பொருளினால் குருதியில் காணப்படும் குருதிக் கலங்களின் உருவாக்கம் பாதிப்படையும்.


குருதிக் கலங்களின் உருவாக்கம் பாதிப்படைவதால் உருவாகும். மாறுபட்ட குருதிக் கலங்கள் குருதியில் அதிகரிக்கும். இத்துடன் நின்றுவிடுவதில்லை. தொடர்ந்தும் குருதிக் கலங்களின் உருவாக்கம் பாதிக்கப்பட்டே காணப்படும். அதாவது இவ் விரசாயனப் பதார்த்தம் குருதிக் கலங்களின் உருவாக்கத்திற்கான நிகழ்ச்சி நிரலை மாற்றம் செய்து விடுவதால் தொடர்ந்தும் இத்தவறு நடைபெற்று புற்றுநோயின் கோரப்பிடியினுள் தள்ளப்படுகின்றது.

புற்றுநோயின் போது கலங்களின் உருவாக்கம் நடைபெறுகின்ற போது ஏற்படும் தவறுகளை சீர் செய்வதற்கான மரபணு கட்டமைப்பு பாதிப்புற்றிருப்பதால் தவறுகள் தொடர்ந்த வண்ணமே நீள்கின்ற உபயோகத்திற்கு ஏற்றதல்லாதவாகின்றன. இக் குருதிப் புற்று நோயானது தாக்கப்படும் கலங்களின் வகைக்கு ஏற்பவேறுபடும். இந்நோய் நிலையில் என்புமச்சையும் இந்த புற்றுநோயாக்கிகளால் தாக்கப்பட்டு குருதிக்கலங்களை செங்குருதிச் சிறுதுணிக்கைகள், வெண்குருதிச் சிறுதுணிக்கைகள், நிணநீர் குழியங்கள், குருதிச் சிறுதட்டு என்பன பாதிக்கப்படும். இதனால் குருதிச்சோகை, நீர்ப்பிடணம் குன்றல், குருதிக்கசிவு தோலின் கீழ் ஏற்படல் மற்றும் நிணநீர் கணு வீக்கம் என்று இன்றும் பல நிலைகளாகத் தொடர்ந்த வண்ணம் காணப்படும். புகைப்பவர்களால் பாவம் அறியாத சிறுவரின் குருதியில் புற்றுநோய் வரலாமா?

**டாக்டர் வெ.நாகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## உயிரணுக்களை இயக்கும் தொழில்நுட்பம்

தேவையான போது உயிரணுக்களை சுரக்கவும் தேவையற்ற போது நிறுத்தி வைக்கவும் புதிய தொழில்நுட்பத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த பிராட்போர்டு மற்றும் லீடு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

இதயத்தின் செயற்பாடுகளை இயக்கப் பயன்படும் புரத மூலக்கூறுகளான சிடி.சி.எப். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே இந்தமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

இனி யாருக்காவது உயிரணு, கரு முட்டை உற்பத்தியில் அல்லது இயக்கத்தில் குறைபாடுகள் இருந்தால் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்வு காணமுடியும்.

அதுபோல தானாக உயிரணுக்கள் வெளியேறுவது போன்ற குறைபாட்டுக்கும் முடிவு கட்டலாம்.

இதன் மூலம் மனித குலத்தின் அடிப்படை அம்சங்களை மறுஉற்பத்தி செய்துள்ளோம் என்று பெருமிதத்துடன் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

## செவ்வாய் குறித்து இங்கிலாந்து விஞ்ஞானிகளின் ஆய்வு

செவ்வாய்க் கிரகம் இப்போது உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது. அங்கு கடல் இருப்பது விஞ்ஞானிகளின் ஆவலைத் தூண்டியுள்ளது.

பல நாடுகளும் செவ்வாயை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து விஞ்ஞானிகள் சமீபத்தில் நடத்திய ஆய்வு முடிவுகள் புவியியல் விஞ்ஞான பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்கள் வருமாறு;





செவ்வாயில் தற்போது நிலவும் ஈரப்பதம் மற்றும் குளிர்ந்த சூழல் ஹெஸ்பேரியன் ஈபோக் எனப்படுகிறது. இது பூமியில் நிலவும் பனிக்காலம் போன்ற சூழலைக் கொண்டது.

செவ்வாயின் மத்திய ரேகைக்கு அருகில் 20 கிலோ மீற்றர் அகலமுள்ள ஏரி இருந்துள்ளது. 3 பில்லியன் (100 கோடிகள் சேர்ந்தது ஒரு பில்லியன்) ஆண்டுகளுக்கு முன் பனிப்பாறைகள் உருகி இந்த ஏரி உருவாகி இருக்கக்கூடும்.

இந்த ஏரியின் ஆயுளை வைத்துப்பார்க்கும்போது செவ்வாயில் தற்போது காணப்படும் உலர்ந்த பருவமாற்றம் ஏற்கனவே, கணிப்பிடப்பட்ட காலத்துக்குப் பிறகே நிகழ்ந்திருக்க வேண்டும். அதாவது 3.8 முதல் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் செவ்வாய் இத்தகைய மாற்றங்களை அடைந்திருக்கும்.

இங்கிலாந்தின் இம்பீரியல் கல்லூரி மற்றும் நாசாவின் செவ்வாய் ஆய்வுக் குழு இணைந்து இந்த ஆய்வை நடத்தியுள்ளன. ஆய்வுக்குழுவின் தலைவரான இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த நிக்கொலஸ் வார்னர் கூறும்போது; 'செவ்வாயின் தற்போதைய பருவ காலம் முக்கியமாக கவனிக்கப்படுகிறது. இதுதான் செவ்வாயில் பனிப்படலம் உருவாகியதற்கான காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எங்கள் ஆய்வு முடிவு செவ்வாய் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கும்' என்றார்.

## ஞாபகமறதியைத் தீர்க்கும் செல்போன் கதிர்வீச்சு

செல்போன், செல்போன் கோபுரம் ஆகியவற்றில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சு ஆபத்தானது. இது மனிதர்களுக்கு சில வியாதிகளை ஏற்படுத்தும் என்று அவ்வப்போது செய்திகள் வருவதுண்டு.

ஆனால், செல்போன் கதிர்களால் ஞாபகமறதி வியாதிக்கு தீர்வு கிடைக்கும் என்று ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. அல்சீமர் என்பது ஒரு ஞாபகமறதி வியாதியாகும். வயதானவுடன் தொற்றிக்கொள்ளும் ஞாபகமறதி இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

இதற்கு தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்காவின் தெற்கு புளோரிடா பல்கலைக்கழக அல்சீமர் நோய்த்தடுப்பு மையம் ஆய்வு நடத்தியது. எலிகளில் இந்த விதபாதிப்புகளை ஏற்படுத்தி பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டன.

அப்போது எலெக்ட்ரோமேக்னடிக் முறையில் சோதனை செய்யப்பட்டபோது அந்த கதிர்வீச்சு ஞாபகமறதி வியாதியை குறைப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த முறையில் பயன்படுத்தப்பட்ட கதிர்கள் செல்போனில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சில் அதிகம் இருக்கும். எனவே, செல்போன் பயன்படுத்துபவர்களுக்கு இந்த ஞாபகமறதி வியாதி தாக்க வாய்ப்புக் குறைவு என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். பீட்டா அமைலாய்டு என்ற வேதிப்பொருள் குறை[illegible] அல்சீமர் ஞாபகமறதிக்கு கா[illegible] இருக்கிறது. செல்போனில் இருந்து வெளிப்படும் கதிர்கள் மூளைசெல்களை தூண்டுவதால் ஞாபகமறதி பாதிப்பு உடையவர்களுக்கு அல்சீமரில் இருந்து முன்னேற்றம் கிடைக்கிறது.



எலிகளுக்கு தினமும் ஒரு மணி நேரம் வீதம் சுமார் 9 மாதங்கள் கதிர்வீச்சு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது அல்சீமர் பாதிப்பு வெகுவாக குறைந்துவிட்டது. சித்தம் கலங்காத நினைவுத்திறன் பாதிப்பு உடையவர்களுக்கு மட்டும் இந்த முறையில் தீர்வு கிடைக்கும். மனிதர்களுக்கும் இந்த முறையில் சிகிச்சை அளிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர். பக்க விளைவுகள் பற்றிய விரிவான ஆய்வுகள் நடத்தப்பட உள்ளது.

"உண்மையாகவே இது வினோதமாக ஏற்படும் அதிசயிக்கத்தக்க மாற்றம்" என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## குழந்தை கொண்டுசெல்லும் புதிய சூட்கேஸ்

பிறந்த குழந்தைகளை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்லும் போது பல பிரச்சினைகளை சந்திக்கவேண்டியிருக்கிறது. புதிய இடத்தின் காலநிலை, தட்பவெப்பம் என பலவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதற்காகவே ஒரு புதிய சூட்கேஸ் ஒன்றை உருவாக்கியுள்ளனர். பேருந்தில் பயணம் செய்யும் போதோ விமானத்தில் பயணம் செய்யும் போதோ குழந்தையை இதனுள் வைத்துக்கொள்ளலாம். அனைத்து காலநிலையையும் தாங்கும் வண்ணம் வடிவமைத்துள்ளனர். இதனுள் ஒரு கமரா மற்றும் எல்சீடி பொருத்தப்பட்டுள்ளது. இதே போல் தாயின் இடமும் கமிரா மற்றும் எல்சீடி கொடுக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் தற்போதைய நிலையை பெற்றோர் உடனுக்குடன் பார்த்துக்கொள்ளலாம். அதேபோல் தாயின் முகத்தை குழந்தையும் பார்த்துக்கொள்ளலாம். உடல் நிலை சரியில்லாத குழந்தையை வெளிநாட்டிற்கு சிகிச்சைக்காக அனுப்பும்போது குழந்தையை இது பத்திரமாக எடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# விடியாத இரவுகள்...

இருள் சூழ்ந்த அந்த இரவு நேரத்தில் இதமாக வருடுகின்ற இளந்தென்றல் சுகமளித்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடற்கரை மணல் போன்று விண்மீன் கூட்டங்கள் காட்சியளித்தன. மேற்குக் கடற்கரையோரம் ஒளிந்திருந்து பார்க்கும் அந்த வானத்து நிலா ஏதோ சேதி சொல்ல, அதனைக் கேட்ட சின்ன அலைகள் கிறுங்குகின்ற சத்தம் அமைதியைக் குலைத்தது. இவ்வாறு இராப் பொழுதின் இராஜாங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்க இருவிழிகள் மட்டும் நீரை ஆறாய் வடித்து நின்றன.

பொழுது விடிஞ்சா செல்வநாயகம் வந்திடுவார். என்ன சொல்லுவது? எனப் பலவாறாக யோசித்துக் கொண்டிருந்தாள் சின்னம்மா. வறுமையின் கொடுமையால் சின்ன வயதில் பள்ளிக்கூடத்தை விட்டு வயல் வேலைக்குச் செல்லத் தொடங்கி இன்று 50 வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. இன்னமும் சேற்றில் கால் பதித்தால் மட்டுமே சோற்றில் கை பதியும் என்ற நிலையாகி விட்டது வாழ்க்கை.

இவ்வாறு சின்னம்மாவின் வாழ்க்கைப் படகு நகர்ந்து கொண்டிருக்க டோகாவுக்குப் போகப் போகிறேன் என அடம் பிடித்த சின்ன மகன் கண்ணனை அனுப்புவதற்குக் கையில, காதில என்றிருந்த அனைத்தையும் விற்றும் காணியை ஈடு வைத்தும் ஒரு வழியாக அனுப்பினாள். இந்தச் சின்ன வளவுக்குள் ஒரு கல் வீட்டைக் கட்டிப் பார்க்க வேண்டும் எனச் சின்னம்மா கனவு கண்டாள். அந்தக் கனவைக் கண்ணன் நிஜமாக்குவான் என்றவளுக்கு ஆறு மாதத்திற்குப் பின் தான் சம்பளம் தருவினம் எண்டு கொம்பனியில சொல்லினம் என்ற கண்ணனின் தொலைபேசிப் பதில் நெஞ்சில் முள்ளைக் குத்தி நின்றது. சின்னம்மாவின் கனவு இதுமட்டுமா? வாழ்க்கைப்பட வேண்டிய வெண்ணிலா. வரம்பில் நின்று வேலை செய்யும் தன் மகள் வெண்ணிலாவுக்கு ஒரு கல்யாணம் செய்து பார்க்க வேண்டும். நான்கு பேர் மதிக்க வாழ வேண்டும். இவ்வாறு அவளது ஒவ்வொரு விடியலிலும் ஒவ்வொரு எதிர்பார்ப்புகள்.

திடீரென எங்கோ நாய் தொடர்ச்சியாகக் குரைக்கும் சத்தம் கேட்டது. நேற்றுக் குட்டி போட்ட ஆட்டுக்கு ஏதாவது நடக்குதோ என எண்ணியவள், பதறியடித்துக் கொண்டு குப்பி விளக்கையும் ஏந்திச் சென்றவளுக்கு அங்கே கண்ட காட்சி தூக்கி வாரிப் போட்டது. வெண்ணிலா யாரோ ஒரு ஆண் மகனுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். அந்த இதமான இராப் பொழுது அவர்களுக்கு இனிமையைக் கொடுத்தது. முத்த மழையில் நனைந்து, காதற்கனலிற் காய்ந்து கொண்டிருந்தனர். ஏதேச்சையாகத் திரும்பிய வெண்ணிலா, தாயாரைக் கண்டு திடுக்கிட்டாள். பல நாட்கள் தொடர்ந்த களவு இன்று வெளிப்பட்டு விட்டதே என ஏங்கினாள். அதிர்ச்சியிலிருந்து முதலில் மீண்ட சின்னம்மா, யாரம்மா இந்தப் பொடியன்? எனக் கேட்டாள், அம்..மா.. அம்...மா! இவரைத்தான்... நான்... காத..லி.க்..கிறன் என வார்த்தைகளை விழுங்கி விழுங்கிக் கூறினாள் வெண்ணிலா. சின்னம்மாவின் கனவு மட்டுமல்ல, கைவிளக்கும் இப்போ உடைந்தது.

வெண்ணிலாவுக்கு ஒருத்தனைக் கட்டிப் பார்க்க வேண்டும் என நீண்டகாலம் எண்ணியிருந்த அவள் கனவு நொடியில் உடைந்து சின்னா பின்னமாகியது. பணம் இல்லாவிட்டாலும் மானம் இருக்கு தன் குடும்பத்துக்கு என நினைத்தவளுக்கு அடி விழுந்தது போலிருந்தது.

தாயின் திருவடிகளில் விழுந்த வெண்ணிலா, அம்மா அவர் ரொம்ப நல்லவரம்மா... எங்க போஸ்ரொவிஸில தான் போஸ் மாஸ்ரரா வேலை செய்யிறார். அவயின்ர வீட்டிலயும் சம்மதம் சொல்..லிவிட்டனராம் எனத் தைரியத்தை வரவழைத்துக் கூறினாள் வெண்ணிலா.

கையில காசில்லை என்பதால் தன் பிள்ளையும் காதல் கல்யாணம் பண்ண நினைச்சிட்டாள் என மனதுள் எண்ணிய சின்னம்மா, உள்ளே போ அம்மா, பிறகு கதைப்பம் என்றாள். உயிரற்ற தொனியில் வெண்ணிலாவின் காதலன் ஏதோ சொல்ல வாயெடுக்க தம்பி நீங்கள் வீட்டை இப்ப போங்கோ நாளைக்கு விடியட்டும் எல்லாத்துக்கும் என நிதானமாகப் பதிலளித்த சின்னம்மா மகளுடன் வீட்டிற்குள் சென்றாள்.

தட்டுத்தடுமாறி ஓலைப்பாயிற் படுத்த சின்னம்மா சிந்திக்கக் கூட முடியாமல் சில நிமிடங்கள் படுக்கையிற் புரண்டாள். வெண்ணிலாவின் செய்கையும் பதிலும் திரும்பத்திரும்ப மனதுள் படம் போல ஓடிக் கொண்டிருந்தது. திரையிற் படம் முடிவுற்றது போல சின்னம்மாவின் மனத்திரையும் ஈற்றில் முடிவுற்றது. அவள் சுய நினைவை இழந்து ஏதோ ஒரு உலகை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தாள்.



வி.பிரியன்

காலையில் பக்கத்து வீட்டு ரெலிபோன் கடையிலிருந்து ஒரு செய்தி வந்தது. கண்ணன் காசு அனுப்பியிருப்பதாகக் கூறினான் என்பது தான் அந்தச் செய்தி. சின்னம்மாவின் முதற்கனவே கண்ணன் அனுப்பும் காசில் ஒரு ரெலிபேன் வாங்குவது என்பதாகும். அப்புறம் நிறையக் கனவுகள்... கற்பனைகள்....


செய்தியைச் சுமந்து வந்த வெண்ணிலா மான்குட்டி போல் துள்ளித் துள்ளி வந்தாள். வருவது மானா? மாதுவா? எனும் மயக்கம் விழிகளில். ஆபரணங்கள் எதுவுமில்லாமலே அழகு தேவதையாக விளங்கினாள் வெண்ணிலா. அழகில் மட்டுமல்ல, குணத்திலும் அவள் தங்கம்தான். அதனால் தானே அவளை போஸ் மாஸ்டர் பிரணவன் காதலித்தான்?

ஓடிய களையில் இளைத்த வெண்ணிலா, அம்மா...எழும்புங்கோ... கண்ணன் காசு அனுப்பியிருக்கான். இருவரும் போய் எடுத்தருவம் எனக் குயில் போலக் கூவினாள். தன் கல்யாணமும் விரைவில் நடைபெரும் என ஆசை கொண்டாள். தாயாரைத் தட்டி எழுப்பினாலும் கூடப் பதிலில்லை. அம்...மா..., அ...ம்...மா, என்...னை... விட்டுப்....போகா...தை....யுங்கோ.... வெண்ணிலாவின் ஓலத்தால் அந்த உதயமே ஸ்தம்பிதமடைந்து விட்டது. விழிகளில் நீர் உதயமாகிய வண்ணம் இருந்தது.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
[illegible]ப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்ரீனா ஜனாதிபதியின் 'அனுபவ' ஆலோசனை



சிறந்த முறையிலான செக்ஸுக்கு வயாகராவைத் தேடிப் போவதைவிட பன்றிக் கறி சாப்பிட்டாலே போதும் என்று கூறியுள்ளார் ஆர்ஜென்ரீனா நாட்டு பெண் ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸ்.

ஆர்ஜென்ரீனாவில் பன்றிக் கறி மிகவும் பிரபலம். பன்றிக் கறியைச் சாப்பிடாதவர்களே கிடையாது என்று கூறும் அளவுக்கு அங்கு பன்றிக் கறி மிகவும் பிரபலம்.

இந்த நிலையில், பியூனஸ் அயர்ஸில் நடந்த நிகழ்ச்சியில் பன்றிக் கறி சாப்பிடுவோருக்கு குஷியூட்டும் தகவலைக் கூறினார் ஜனாதிபதி கிறிஸ்டினா.

அவர் பேசுகையில்;

வயாகராவை விட சக்தி வாய்ந்தது பன்றிக்கறி. இதை நான் எனது சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன் என்று கிறிஸ்டினா கூற ஆர்ஜென்ரீனாவே கிளுகிளுப்பாகியுள்ளது.

கிறிஸ்டினா தொடர்ந்து பேசுகையில்; எனக்கு பன்றிக் கறி சாப்பிட்டால் நமது செக்ஸ் செயல்பாடுகள் தூண்டுவிக்கப்படுவது முதலில் தெரியாமல்தான் இருந்தது. ஆனால், பின்னர்தான் அதை புரிந்துகொண்டேன்.

வயாகரா மாத்திரையை நாடுவதை விட வறுக்கப்பட்ட பன்றி இறைச்சி மிகவும் சிறந்த முறையில் நமது செக்ஸ் உணர்வுகளைத் தூண்டிவிடும்.

எனது கணவர் நெஸ்டர் கிர்ச்னரும் நானும் பன்றிக் கறி சாப்பிட்ட பின்னர் சிறந்த முறையிலான செக்ஸ் உறவைக் கொள்ள முடிந்தது. இதை வைத்துத்தான் இவ்வாறு அடித்துச் சொல்கிறேன் என்றார் கிறிஸ்டினா.

அத்தோடு, நில்லாமல் பன்றிக் கறி தொழிலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகளையும் அவர் அறிவித்துள்ளார்.

உலகிலேயே பன்றிக் கறியை அதிகம் சாப்பிடும் மக்கள் ஆர்ஜென்ரீனா நாட்டினர் என்பது மேலதிக தகவல்.


இவர்களுக்கு கோழிக் கறி உள்ளிட்ட பிற வகை இறைச்சிகள் பிடிக்காது. பன்றிக் கறிதான் இவர்களின் தேசிய உணவு என்று கூறும் அளவுக்கு பன்றிக் கறிக்கு அடிமையானவர்கள் ஆர்ஜென்ரீனா நாட்டவர்.

இத்தனைக்கும் தெற்கு அட்லான்டிக் மீன்வளப் பகுதியில் ஆர்ஜென்ரீனா இருந்தாலும் கூட கடல் உணவுகள் பக்கம் இவர்கள் எப்போதாவதுதான் திரும்பிப் பார்க்கிறார்கள்.

கிறிஸ்டினா சொல்வது குறித்து செக்ஸ் நிபுணரான அமடோ பெச்சாரா என்பவர் கூறுகையில்; பன்றிக் கறியால் செக்ஸ் செயல்பாடுகள் தூண்டுவிக்கப்படுவது குறித்து இது வரை எந்த நிரூபணமும் இல்லையென்றார்.

# விபசார அழகிகளை ஆண்கள் நாடுவது ஏன்?

ஆண்கள் விபசாரப் பெண்களை நாடுவது ஏன் என்ற தலைப்பில் ஒரு சர்வதேச அமைப்பைச் சேர்ந்த மனநல நிபுணர்கள் ஆய்வு நடத்தி அதன் முடிவை வெளியிட்டுள்ளனர்.



பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 700 ஆண்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு பதிலை வாங்கி ஆய்வு செய்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சொன்ன காரணம்– செக்ஸ் தேவையை உடனடியாகத் தீர்க்க விபசார பெண்கள்தான் சரியான வழி என்று கூறியுள்ளனராம்.

கருத்துக் கணிப்பில் கலந்துகொண்ட ஒருவர் கூறுகையில்;

இது இன்ஸ்டன்ட் கோப்பி. இன்ஸ்டன்ட் உணவு காலம். விபசாரம் என்பது இன்ஸ்டன்ட் செக்ஸ் என்று கூறினாராம்.

21 சதவீதம் பேர் குறிப்பிட்ட இனம், செக்ஸ் அம்சங்கள் பொருந்திய பெண்களைத் தேர்வு செய்ய ஆர்வம் காட்டுகிறார்களாம். அந்த மாதிரிப் பெண்களைத் தேடிப் போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

20 சதவீதம் பேர் தங்களது மனைவி அல்லது தோழிகளிடம் எதிர்பார்த்த இன்பம் கிடைக்காததால் விபசாரப் பெண்களை நாடுவதாகக் கூறியுள்ளனர்.

15 சதவீதம் பேர் விபசாரப் பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டால் எந்தவித சிக்கல்களும் கிடையாது. அதனால்தான் போகிறோம் என்று கூறியுள்ளனர்.

செக்ஸ் வெறி, போதை, குடிப்பழக்கம் காரணமாக விபசாரப் பெண்களை நாடுவது 3 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

உலகத்திற்கேற்ற நல்ல ஆய்வுதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிய ஆட்டமென்ன?



கிரிக்கெட் போட்டிகளில் பந்தை சேதப்படுத்துவது தொடர்கிறது. கிரிக்கெட் வீரர்கள் பலர் அடிக்கடி இப்பிரச்சினையில் மாட்டிக் கொள்கின்றனர். எதிரணித் துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டை கைப்பற்ற பந்து வீசும் அணியின் வீரர்கள் பந்தைச் சேதப்படுத்துகின்றனர். தலைமுடிக்குப் பயன்படுத்தும் ஜெல், ஜெல்லி வகை இனிப்புகள் போன்றவற்றைப் பந்தின் மீது தடவுதல், பிளேட் மற்றும் கூரிய கருவிகளால் பந்தைச் சுரண்டுதல், பந்தை வாயினால் கடித்தல் போன்ற செயல்கள் சேதப்படுத்துதல் குற்றமாகக் கருதப்படுகிறது.

**பெரும் தவறு:**

இவ்வாறு பந்தை சேதப்படுத்துதல் குற்றமாகும். சர்வதேச கிரிக்கெட் சபை வகுத்துள்ள கிரிக்கெட் விதிகளின்படி (விதி 42, பிரிவு 3) இதற்குப் பல வகை தண்டனைகள் உள்ளன. பந்து சேதப்படுத்தப்பட்ட அளவின்படி மைதானத்தில் உள்ள நடுவர்கள் உடனடித் தீர்ப்பு வழங்குவர். ஒரு வீரர் பந்தைச் சேதப்படுத்திவிட்டால் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்படும்.

இச்சம்பவம் 2006 ஆம் ஆண்டு இங்கிலாந்து-பாகிஸ்தான் மோதிய போட்டியில் அரங்கேறியது. நடுவர்களின் முடிவை ஏற்க மறுத்த பாகிஸ்தான் வீரர்கள் போட்டியைத் தொடர மறுத்து விட்டனர். இதனால் இப்போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

**அபராதம்:**

ஒரு போட்டியில் அடிக்கடி ஒரு வீரர் பந்தைச் சேதப்படுத்திக் கொண்டிருந்தால் தொடர்ந்து விளையாடுவதற்கு அவருக்குத் தடை விதிக்கப்படவும் வாய்ப்புள்ளது. அதற்குப் பின் இவ்வகை குற்றத்துக்கான தண்டனை அதிகப்படுத்தப்பட்டது. அதிக அளவில் அபராதமும் விதிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக லோர்ட்ஸில் நடந்த போட்டியில் இங்கிலாந்து கப்டன் மைக்கேல் ஆதர்டன் பந்தைச் சேதப்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு மூன்று இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. தற்போது 'ரி.வி.', கமரா உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் கிரிக்கெட்டில் அதிக பயன்பாட்டில் உள்ளன. இதனால் பந்தைச் சேதப்படுத்துவோர் இலகுவாகக் கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றனர்.

**போட்டித் தடை:**

பெரும்பாலும் அனைத்து அணிகளைச் சேர்ந்த வீரர்களும் பந்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்குள்ளாகியுள்ளனர். கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ள இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினும் பந்தைச் சேதப்படுத்தியுள்ளார் என்றால் நம்ப முடிகிறதா?


2001 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சச்சின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டு ஒரு போட்டித் தடை விதிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு இவ்வகை குற்றத்துக்காக இந்திய வீரர் ராகுல் டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

**பாகிஸ்தான் ஆதிக்கம்:**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் தான் அதிகளவில் பந்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்குள்ளாகியுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கிரிக்கெட் அரங்கில் இதற்காக முதன் முதலில் தடையை எதிர்கொண்ட வீரர், பாகிஸ்தானின் வக்கார் யூனிஸ் தான். 2000 ஆம் ஆண்டு ஒரு போட்டியில் பங்கேற்க இவருக்குத் தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அப்ரிடி பந்தைக் கடித்துச் சேதப்படுத்தினார். இவர் மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டு 2 சர்வதேசப் போட்டிகளில் தடையை எதிர்கொண்டுள்ளார்.

**'ரிவர்ஸ் ஸ்விங்' காரணம்:**

பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டு வரும் நிலையிலும் கிரிக்கெட் வீரர்கள் பந்தைச் சேதப்படுத்துதல் தொடர்கிறது. இதற்குப் பந்தை 'ரிவர்ஸ் ஸ்விங்' செய்ய வேண்டும் என்பதே முக்கிய நோக்கம். இது பாரம்பரியமிக்க கிரிக்கெட் போட்டிகளுக்கு ஒரு களங்கமாக அமைந்துள்ளன. தடை மற்றும் அபராதத்தை அதிகப்படுத்தும் பட்சத்தில் இச்சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் கட்டுப்படுத்த வேண்டும்.






# பந்துச் சேதம் நடக்கிறது

தான் பந்தை சேதப்படுத்தவில்லை என்ற போதிலும் ஒவ்வொரு அணியிலும் பந்து சேதம் நடக்கிறது என்று பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் சாகித் அப்ரிடி குற்றம் சாட்டியிருக்கிறார்.

கப்டன் மொகமது யூசுப் தலைமையிலான பாகிஸ்தான் அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கப்டன் ரிக்கி பொண்டிங் தலைமையிலான அந்த அணிக்கு எதிராக விளையாடியது.

இரு அணிகளுக்குமிடையே 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடந்தது. இதில் அவுஸ்திரேலிய அணி 5-0 என்று பாகிஸ்தான் அணியை முழுமையாகத் தோற்கடித்தது.

அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையே பெர்த் நகரில் 5ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நடந்தது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு ஆறுதல் வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆஸி. போராடி இதிலும் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற பாகிஸ்தான் அணியின் தற்காலிக கப்டனான சாகித் அப்ரிடி பந்தை சுரண்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. விசாரணையின் முடிவில் அவருக்கு 2 20க்கு 20 போட்டியில் விளையாட ஐ.சி.சி. நடுவர்கள் தடைவிதித்தனர்.

பந்தை சேதப்படுத்தியதாக 2 போட்டிகளில் விளையாட விதிக்கப்பட்ட தடை குறித்து அப்ரிடியிடம் கேட்ட போது;

பந்தை சேதப்படுத்துவது ஒன்றும் கிரிக்கெட்டில் புதிதல்ல என்றும் ஆனால் தான் கையாண்ட விதம் தான் தவறானது என்றார் அவர்.

மேலும், பந்தை சேதப்படுத்தாத அணி எதுவும் உலகில் இருக்கமுடியாதென்ற ரகசியத்தையும் பாகிஸ்தான் அணியின் மூத்த வீரரான சாகித் அப்ரிடி மனம் திறந்து சொல்கிறார்.

நான் கையாண்ட விதம் தான் தவறானது. நான் அதை செய்திருக்க முடியாது. ஒரு போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால் இது தவறான வழியாகும் என்று அப்ரிடி கூறியதை மேற்கோள்காட்டி உள்ளூர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பந்தை சேதப்படுத்தியதை குறித்து அப்ரிடியிடம் கேட்ட போது;

நான் பந்து வீச்சாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முயற்சித்தேன். ஆனால் அது தவறான வழியில் முடிந்து விட்டது என்றார்.

அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையே பெர்த் நகரில் நடந்த 5ஆவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியில் அப்ரிடி பந்தை கடித்து சேதப்படுத்தியது அனைத்து ரி.வி. சனல்களிலும் ஒளிபரப்பாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காயமே காரணம்

விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு காயமென்றால் சிக்கல் தான். உதாரணமாக, சமீபத்திய அவுஸ்திரேலியன் ஓப்பன் டெனிஸ் தொடரில் நடால், சபினா உள்ளிட்ட சில முன்னணி நட்சத்திரங்கள் காயம் காரணமாகப் பாதியில் விலகினர். இதனால் இவர்களது சாதனைப் பயணம் தடம் மாறியது.

**பாவம் நடால்:**

அவுஸ்திரேலியன் ஓப்பன் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் நடப்புச் சாம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய ரபெல் நடால் (ஸ்பெயின்), இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேயை எதிர்கொண்டார். இப்போட்டியில் நடால் 3-6,6-7,0-3 எனப் பின்தங்கியிருந்தபோது முழங்கால் காயம் காரணமாக விலகுவதாக அறிவித்தார். இதனால் முர்ரே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அரையிறுதிக்குத் தகுதிபெற்றார். இப்போட்டியில் நடால், பாதியில் விலகியதால் இவரது நடப்புச் சாம்பியன் அந்தஸ்து முதலில் பறிபோனது. பின்னர் ஏ.டி.பி. டெனிஸ் தரவரிசைப் பட்டியலில் 4 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

**சங்கடத்தில் சபினா:**

பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில் ரஷ்யாவின் தினாரா சபினா சகநாட்டைச் சேர்ந்த மரியா கிரிலென்கோவாவை எதிர்கொண்டார். இப்போட்டியில் சபினா 4-5 எனப் பின்தங்கியிருந்தபோது முதுகு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாகப் பாதியில் விலகுவதாக அறிவித்தார். இதனால் கிரிலென்கோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு காலிறுதிக்கு முன்னேறினார்.

2009 இல் இறுதியாட்டம் வரை முன்னேறிய சபினா இம்முறை காலிறுதிக்கு முன்னேற முடியாமல் போனது மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்தது. இதனால் இவரது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் கனவு பறிபோனது. ஆனால், சமீபத்தில் வெளியிடப்பட்ட டபிள்யூ.டி.ஏ.தரவரிசைப் பட்டியலில் சபினா இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். இது இவருக்குச் சற்று ஆறுதலான விடயம்.

**வருத்தத்தில் பூபதி:**

ஆண்கள் இரட்டையர் பிரிவில் பெலாரஸின் மேக்ஸ் மிர்னியுடன் இணைந்து விளையாடிய இந்தியாவின் மகேஷ் பூபதி, முதல் சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார். இப்போட்டியின் போது பூபதியின் காலில் காயமேற்பட்டது. இதனால் இவர் சக நாட்டைச் சேர்ந்த சானியா மிர்சாவுடன் இணைந்து கலப்பு இரட்டையர் போட்டியில் பங்கேற்கவில்லை. இதன் மூலம் இவர்களது நடப்புச் சாம்பியன் அந்தஸ்துப் பறிபோனது தவிர, ஏ.டி.பி. இரட்டையர் தரவரிசையில் பூபதி 8 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

வரும் காலங்களில் இவர்கள் முக்கியமான தொடருக்கு முன் உடற்தகுதி குறித்து முழுப்பரிசோதனை மேற்கொண்டால் சாதனைப் பயணத்தைச் சிக்கலின்றித் தொடரலாம்.






# கேள்விக் குறியாகும் ஆட்டம் ?



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்வாரா? என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

சமீப காலத்தில் அடிக்கடி காயத்தினால் அவதிப்பட்டு வரும் பிரட்லீ கடந்த சில மாதங்களுக்கு முன்பு அளித்த பேட்டியொன்றில் இன்னும் சில காலம் தன்னால் தொடர்ந்து கிரிக்கெட் ஆட முடியுமென்று குறிப்பிட்டிருந்தார். இருந்த போதிலும் பிரட்லீயின் காயம் அவருக்கு அச்சுறுத்தலாகவுள்ளது. எனவே, அவர் கோடை காலத்தில் நடக்கவிருக்கும் ஆஷஸ் தொடரில் பங்கேற்பாரா என்பது நிச்சயமில்லாமல் இருக்கிறது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ தனது முழங்கை காயத்திற்காகச் சமீபத்தில் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். தற்போது அவர் மறுவாழ்வுச் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறார். இது குறித்து அவரிடம் கேட்டபோது;

தற்போது ஓய்வுபெறும் திட்டம் எதுவுமில்லை. பொறுமையாக நிலைமையைக் கவனித்து வருகிறேன். மீண்டும் அணியில் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

தற்போது மறுவாழ்வு சிகிச்சையை மேற்கொண்டு வருகிறேன். நேரம் கிடைக்கும் போது எனது நிலை குறித்தும் கிரிக்கெட் வாழ்க்கை குறித்தும் சிந்தித்து வருகிறேன். அவசரப்பட்டு ஓய்வுபெறமாட்டேன். சரியான நேரம் வரும்போது ஓய்வுபெறுவேன் என்றும் அவர் கூறினார்.

மேலும், இன்னும் சில காலம் கிரிக்கெட் விளையாட முடியும். இருந்தபோதிலும் பொறுமையாக இருந்து நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன் என்று 33 வயதான லீ கூறியதை மேற்கோள்காட்டி அவுஸ்திரேலியன் அசோஸியேற்றட் பிரஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தது. அப்போது முழங்கையில் காயமடைந்ததால் பிரட் லீ நாடு திரும்பினார். அங்கு அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

அதே போல கடந்த ஆண்டு இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே ஆஷஸ் தொடர் கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் நடந்தது. அப்போது பிரட்லீக்கு வயிற்றின் பக்கவாட்டில் காயமேற்பட்டதால் அவர் அணியில் இடம்பெறவில்லை.

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ அணியில் இடம்பெறாதது அணிக்குப் பெரிய இழப்பாகவிருந்தது. இதை அணி நிர்வாகம் நன்கு உணர்ந்தது. அந்த அணி சர்வதேசப் போட்டிகளில் தோல்வியைத் தழுவியது.

இதனைத் தொடர்ந்து தேர்வுக் குழுவின் இளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அணியில் வாய்ப்பளித்தனர். இதில் டக் பொலிங்கர், கிளின்ட் மெக்கே மற்றும் ரியான் ஹாரிஸ் ஆகியோர் நன்கு பிரகாசித்து வருகிறார்கள்.

இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான பிரட்லீ பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணி சார்பில் பங்குகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 30 வீராங்கனைகள்

இலங்கைக் கிரிக்கெட் சபை பெண்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 பெண் கிரிக்கெட் வீராங்கனைகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி குருநாகல் பெண்கள் கிரிக்கெட் சபையைச் சேர்ந்த 8 பேரும் கோல்டிஸ் மற்றும் மேரியன்ஸ் பெண்கள் கழகங்களைச் சேர்ந்த 6 பேரும் பாலின்க் கிரிக்கெட் கழகத்தைச் சேர்ந்த இருவரும் இலங்கை பெண்கள் மற்றும் மொரட்டுவ பெண்கள், கிரிக்கெட் சபையைச் சேர்ந்த ஏனையவர்களுமாக மொத்தம் 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த பெண்களுக்கான 20 இற்கு 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தமது திறமைகளை வெளிப்படுத்திய பல வீராங்கனைகளும் இப் பயிற்சிக்காக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குழுவிற்கு தலைவியாக கோல்டிஸ் கழகத்தைச் சேர்ந்த காமினி செனவிரட்னவும் உபதலைவியாகக் குருநாகல் பெண்கள் கிரிக்கெட் சம்மேளனத்தைச் சேர்ந்த தில்கானி மனோதராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகுடனான சதுரங்க ஆட்டத்தில் அஹமதி நிஜாத்தின் காய் நகர்த்தல்

ஈரானின் அணு நிகழ்ச்சித் திட்டம் குறித்து மேற்குலகினால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதுமாக நேரத்திற்கு ஒரு அறிக்கை விடுத்து வரும் ஈரானிய ஜனாதிபதி மஹ்மூட் அஹமதி நிஜாத் அரசியல் சதுரங்கத்தில் தான் தேர்ச்சி பெற்றவர் என்பதை இவ்வாரம் மீண்டும் நிரூபித்துள்ளார்.

தனது நாட்டுக்கெதிராக புதிய தடைகளை விதிப்பதற்கான மேற்குலகின் இறுதிக்கட்ட முயற்சிகளைத் தடுக்கும் முகமாக இறுதி நேரத்தில் ஐ.நா.வின் நிபந்தனைகளுக்கு இணங்குவதாக அஹமதி நிஜாத் தெரிவித்த அதேநேரத்தில் ஏவுகணை நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஐ.நா.வின் தடைகளுக்கு மத்தியிலும் எலி, ஆமைகள் மற்றும் சில புழுக்களைக் கொண்ட ரொக்கெட் ஒன்றை ஈரான் வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது.

ஈரானின் அணு நிகழ்ச்சித் திட்டம் குறித்து ஐ.நா. மற்றும் வல்லரசு நாடுகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள பல மாதங்களாக ஈரான் மறுத்து வந்தது.

இதிலுள்ள முக்கிய நிபந்தனை எரிபொருளாக மாற்றும் செயன்முறைகளுக்காக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் பெரும்பகுதியை ரஷ்யா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு ஈரான் அனுப்ப வேண்டும் என்பதாகும்.

பல மாதங்களாக இதற்கு மறுப்புத் தெரிவித்து வந்த ஈரான் தனது நாட்டிற்கெதிரான தடைகளை விதிப்பதற்கு ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதரவைப் பெற மேற்குலகு தயாரானதையடுத்து திடீரென செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பத் தயாரென அறிவித்தது.

இதேநேரத்தில் உயிரினங்களைக் கொண்ட ரொக்கெட் ஒன்றைத் தாம் வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியதை ஈரானின் அரச தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பிய அதேவேளை, தமது இந்தச் சாதனையானது மேற்குலகின் அகங்கார சிந்தனையை தகர்க்க உதவும் எனக் குறிப்பிட்ட அஹமதி நிஜாத். ஈரான் விரைவில் விண்வெளிக்கு வீரர்களை அனுப்புமெனத் தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விண்வெளி நிகழ்ச்சித் திட்டம் நீண்டதூர ஏவுகணைத் திறனின் அபிவிருத்தியை உள்ளடக்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

அஹமதி நிஜாத்தை மிகச் சிறந்த அரசியல் சதுரங்க வீரரென வர்ணிக்கும் மேற்குலக நிபுணர்கள் சர்வதேச அரங்கில் மிக நுட்பமான முறையில் அவர் காய்களை நகர்த்தி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் போன்ற வல்லாதிக்க சக்திகள் ஈரானுக்கெதிராக ஓரணியில் ஒன்று திரண்டுள்ள போதும் ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை ஈரானுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

அணுவாயுதமென்பது ஒரு கணப்பொழுதில் இலட்சக்கணக்கான உயிர்களைக் காவு கொள்ளக் கூடியது என்பதால் அவ்வாறானதொரு தயாரிப்பை கடுமையாக எதிர்ப்பது நியாயமானதே.

ஆனால் தம்மகத்தே இவ்வாறான ஆயிரக்கணக்கான குண்டுகளைக் குவித்து வைத்திருக்கும் வல்லாதிக்க அரசுகள் மற்றொரு நாட்டை அவ்வாறான குண்டுகளைத் தயாரிக்காதே எனக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கின்றது?

வல்லரசுகளிடமுள்ள ஆயிரக் கணக்கான அணுவாயுதங்களை ஒழிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாதவரை, ஏனைய நாடுகளின் அணுவாயுத தயாரிப்புகளை நிறுத்துமாறு மேற்குலகினால் எழுப்பப்படும் கூச்சல்கள் நகைப்புக்கிடமானதாகவே இருக்கும்.

உலக நாடுகளின் பொது ஸ்தாபனமாக விளங்கும் ஐ.நா. உள்ளிட்ட முக்கிய ஸ்தாபனங்கள் வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் நிலையில் இவ்வாறானதொரு பொது மன்றத்திடமிருந்து நீதியை எதிர்பார்ப்பதென்பது முட்டாள்த்தனமானது என்பது வரலாற்றிலிருந்து படித்த பாடம்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டு பெரும் படையெடுப்பை நடத்திய அமெரிக்காவும் பிரிட்டனும் அந்நாட்டு வளங்களையும் மக்களையும் சீரழித்து சின்னாபின்னமாக்கியதன் பின்னரே அங்கு எந்தவிதப் பேரழிவு ஆயுதங்களும் இல்லையென்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்தது.

இந்நாடுகள் சொன்னது முழுப் பொய் என்று தெரிந்த பின்னரும் கூட அந்நாடுகளின் தலைமைத்துவங்களுக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

உலக வரலாற்றின் துக்கம் தோய்ந்த பக்கங்கள் அனைத்தும் 'பக்கச்சார்பு' என்ற கரங்களினால் எழுதப்பட்டவையாகும்.

இவ்வாறானதொரு உலக ஒழுங்கில் மேற்குலகுடனான புதிய சதுரங்க ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறார் அஹமதி நிஜாத்.

போட்டியாளர்களுக்கு கடும் சவாலாக அஹமதி நிஜாத் விளங்குகின்றபோதும் அவர்களது கறைபடிந்த இரும்புக் கரங்களுக்குள்ளிருந்து இவரால் மீண்டெழ முடியுமா என்பது சந்தேகத்திற்கிடமானதே.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பார்கள். ஆனால் வல்லாதிக்கத்திற்கு.....? பொறுத்திருந்து பார்ப்போம்.



சாகசப் பயிற்சியொன்றில் ஈடுபட்டிருக்கும் இந்திய சிறுமியைக் காண்கிறீர்கள்.



## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

# பழங்குடி பெண்ணின் மரணத்துடன் உலகிலிருந்து மறையும் 'போ' மொழி

அந்தமான் தீவின் பழங்குடிகளுள் ஒன்றான 'போ' இனத்தில் இறுதியாக எஞ்சியிருந்த பெண்ணும் உயிரிழந்ததையடுத்து அவர்களின் மொழியும் உலகிலிருந்து அழிந்துள்ளது.

சுமார் 65 ஆயிரம் வருட பழைமை வாய்ந்த இந்த 'போ' மொழி, போவாசர் [வயது 85] எனும் பழங்குடியின் இறுதிப் பெண் கடந்த வாரம் உயிரிழந்ததுடன் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாரிசுகள் அற்ற இப்பெண் பல வருடங்களின் முன்னரே கணவனையும் இழந்ததாகவும் இவருக்கு துணையாகவிருந்த மற்றுமொரு 'போ' மொழி பேசும் பழங்குடிவாசி பல வருடங்களின் முன் உயிரிழந்ததையடுத்து சொந்த மொழியில் பேச யாருமின்றி தனித்திருந்ததாகவும் டில்லியில் உள்ள ஜவஹர்லால் தேசிய பல்கலைக்கழகத்தின் மொழியியல் பேராசிரியர் அன்விதா அப்பி தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பழங்குடிப் பெண்ணின் மரணத்தால் 'போ' மொழியையும் இழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்தமானின் வடபகுதி காடொன்றில் பிறந்த இப்பெண் பழங்குடி பாரம்பரிய சமூகத்தில் வளர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் வேறு இடத்தில் குடியமர்த்தப்பட்ட இவர் பிறந்த இடத்திற்கு மீளச் செல்ல விரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடானில் பட்டினியில் வாடும் 43 இலட்சம் மக்கள்

சூடானின் தென்பகுதியில் இடம்பெறுகின்ற மோதல்கள் காரணமாகவும் நிலவுகின்ற வரட்சி காரணமாகவும் பட்டினிக் கொடுமைக்குள் தள்ளப்பட்டு அவசர உணவு உதவியை சர்வதேச சமூகத்திடமிருந்து எதிர்பார்த்து நிற்கும் மக்களின் எண்ணிக்கை சுமார் 43 இலட்சம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு நிறுவனமான உலக உணவுத்திட்டம் (World Food Programme) இவ்வாரம் அறிவித்திருக்கிறது.

கடந்தவருடம் இத்தொகை சுமார் 10 இலட்சமாக இருந்தது. இப்போது அது நான்கு மடங்கிலும் கூடுதலாக அதிகரித்திருக்கும் அவலத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மழை ஆரம்பிக்கும் பட்சத்தில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படக் கூடிய ஆபத்தை எதிர் நோக்கியிருக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்காக 50 ஆயிரம் மெற்றிக்தொன் சோளம், துவரையின தானியங்கள் மற்றும் மரக்கறி எண்ணெயை தயார் நிலையில் வைத்திருப்பதாக உலக உணவுத் திட்டம் இவ்வாரம் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மழைக்காலம் ஆரம்பமாகவிருக்கும் நிலையிலேயே பட்டினிக் கொடுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கையில் கடுமையான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்யத் தொடங்கினால் சூடானின் தென்பகுதிக்கான பாதைகள் தடைப்பட்டுவிடும். உணவு உதவியில் இருந்து மக்கள் துண்டிக்கப்பட்டுவிடுவார்கள் என்று உலக உணவுத்திட்டத்தின் சூடான் ஒருங்கிணைப்பாளர் லியோவான் டெர் வெல்டென் கூறியிருக்கிறார்.

மழையின் தாக்கத்தையும் உள்நாட்டு சந்தைகளில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களின் அளவையும் பொறுத்து இவ்வருடத்தில் இரு மாதங்கள் முதல் எட்டு மாதங்கள் வரையான காலகட்டத்துக்கு சூடான் தென்பகுதி மக்களுக்கு உணவு உதவி செய்வதற்கு உலக உணவுத்திட்டம் ஏற்பாடுகளைச் செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சூடானில் 2009 ஆம் ஆண்டில் மோதல்களில் 2500 பேர் கொல்லப்பட்டதுடன், தென்பகுதியில் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வீடுவாசல்களை இழந்து இடம்பெயர்ந்திருக்கிறார்கள். அத்துடன், வரட்சி சாகுபடிகளைக் கடுமையாகப் பாதித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, 336ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.